திருக்கோயில்

ஜனவரி
2000

விலை
ரூபாய் ஐந்து



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 28.11.99 அன்று தங்கத்தேர் தொடக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்வளர்ச்சி இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தங்கத்தேர் வெள்ளோட்டத்தைத் தொடக்கிவைத்தார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரசுவதி சங்கராசாரிய சுவாமிகள், கயிலை மாமுனிவர் பேரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள், திருப்போரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சிதம்பர சிவஞான சுவாமிகள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு அருளாசியுரை வழங்கினார்கள். மயிலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ந. பூ. இராம ஜெயம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சென்னை இணை ஆணையாளர் திருமிகு ஜி. இராஜநாயகம், பி.ஏ.பி.எல்., திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம், திருக்கோயில் செயல் அலுவலர் திரு. மு. இராமச்சந்திரன் மற்றும் அறங்காவலர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

திருக்கோயில்

திங்கள் இதழ்

தனி இதழ்	:	ரூ. 5.00
ஆண்டு உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 60.00
ஆயுள் உறுப்பினர் கட்டணம்	:	ரூ. 500.00

மாலை	திருவள்ளுவர் ஆண்டு 2030	பிரமாதி ஆண்டு தை	மணி
42	ஜனவரி 2000		1

சிறப்பாசிரியர்

திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.
ஆணையாளர்

ஆசிரியர்

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.
கூடுதல் ஆணையாளர்

திரு ப. தனபால், எம்.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர், தலைமை இடம்

திருமதி மா. கவிதா, பி.எல்.
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ., பி.எல்.
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

முகப்பு

திருவரங்கம் அருள்மிகு அரங்கநாதர்
- உற்சவர் நம்பெருமாள்

பொருளடக்கம்

வேண்டாம் பிறவி
- ச. சாவர்க்கர், இ.ஆ.ப. ஆணையாளர்

திருவாதிரை விழாவின் தொன்மையும் சிறப்பும்
- சுகவனேஸ்வர், இ.ஆ.ப.

மழை பொழிவிக்கும் மார்கழி நீராடல்
- முனைவர் த. அமிர்த லிங்கம்

'காத்யாயனி விரதமும், மகரசங்கராந்தி என வழங்கப்படும் பொங்கல் திருவிழாவும்
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

வாசகர் எண்ணங்கள்

சிவஞான போதத்தில் ஆன்ம ஞானம்
- முனைவர் சி, அருணை வடிவேலு முதலியார்

சித்தர் தரிசனம்
- எம். ஜெகதீசன், எம்.ஏ

கம்பரின் இராமாவதாரம்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

எம்பார்
- திருமதி கோமதி ராகவன்

மேனை அரிவைக்குரிய பேரன்
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

விசுவ ரூப முருகன்
- கல்பாக்கம் அருள்ஞானி அடிகளார்

இறைவனை உணரும் வழி
- திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

கந்தர் அநுபூதி ஆய்வுரை
- பேராசிரியர் இரா. கோபால கிருட்டிணன்

வினாவும் விளக்கமும்
- பருத்தியூர் டாக்டர் கே. சந்தானராமன்

அன்னை கற்பகாம்பாள் தங்கத்தேர் பவனி காண வாரீர்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
உயர்திரு ஆணையாளர் அவர்கள்
திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

வேண்டாம் பிறவி

- திருமிகு ச. சாவர்க்கர், இ.ஆ.ப.,
ஆணையாளர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 34.

1. நீயும் அநாதி நானும் அநாதி
நீயோ தலைவன் நானோ அடிமை
எனக்கு உடலை ஏன் கொடுத்தாய்
என் நிம்மதியை எதற்காகக் கெடுத்தாய்

2. நானா பொறுப்பு என்று கேட்கின்றாய்
நானல்ல என்று நான் சொல்லுகின்றேன்
பின்னால் உணர்வாய் என்று கூறுகின்றாய்
முன்னால் வருவதை மட்டுமே எண்ணுகின்றேன்.

3. மாயப் பிறவி வேண்டா மென்கின்றேன்
தூயனாக்கவே பிறவி என்று சொல்லுகின்றாய்
என்னுடைய அனுமதி எதற்காக என்கின்றாய்
உன்னுடைய நோக்கத்தை எப்போது உணர்ந்திடுவேன்

4. இன்பம் மட்டுமே என்றால் மகிழ்கின்றேன்
துன்பம் மட்டுமே என்றால் துவழ்கின்றேன்
இரண்டையும் சேர்த்து வற்புறுத்திக் கொடுக்கின்றாய்
இரந்து கேட்கிறேன் எப்பொழுது விடுவிப்பாய்

5. பயிற்சி முடியும் கட்டத்தில் தெளிந்திட்டேன்
பயன் கிட்டும் நேரத்தில் இருந்திட்டேன்
கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை
கை தூக்கி விடுவாயா காத்திருந்தால்.

திருவாதிரை விழாவின் தொன்மையும் சிறப்பும்

– திருமிகு சுகவனேஸ்வர், இ.ஆ.ப.,
தலைவர், இரண்டாம் மாநில நிதிக்குழு, தமிழ்நாடு அரசு, சென்னை

சிவபெருமானுக்கு உரிய திருவாதிரை விழா நம் தமிழ்த்திருநாட்டில் தொன்றுதொட்டு சிறப்புறக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

திருநாவுக்கரசர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினை ''முத்துவிதானம் மணிப்பொற்கவரி'' எனத் தொடங்கும் தேவாரத் திருப்பதிகம் முழுவதும் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருவாரூரில் மட்டுமன்றி உலகமெல்லாம் திருவாதிரைத் திருவிழா கொண்டாடப்பட்டது என்பதனைத் திருநாவுக்கரசர்,

''ஒரூர் ஒழியாது உலகம்
எங்கும் பணிந்தேத்தும்
ஆரூ ரன்தன் ஆதிரை
நாளால் அதுவண்ணம்''

என்று பாடியிருப்பதும் இங்குநாம் உணர்ந்து இன்புறத்தக்க ஒன்றாகும்.

திருஞானசம்பந்தரும் திருவாதிரைத் திருவிழாவின் சிறப்பினைத் தாம் பாடியுள்ள திருமயிலைத் திருப்பதிகத்தில்,

''ஊர்திரை வேலை உலாவுமுயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்''

எனப் பாடிச் சிறப்பித்திருக்கக் காணுகின்றோம்.

இருபத்தேழு நட்சத்திரங்களில் சிவபெருமானுக்கு உகந்தது திருவாதிரை நட்சத்திரம் ஆகும்; திருமாலுக்கு உகந்தது திருவோண நட்சத்திரம் ஆகும். ஆகவேதான் மற்ற நட்சத்திரங்களுக்கு இல்லாத சிறப்பாக இவ்விரு நட்சத்திரங்கள் மட்டும் ''திரு'' எனும் அடைமொழியுடன் வழங்கப்பட்டு வருவதைக் காணுகின்றோம்.

திருவாதிரைத் திருநட்சத்திரம் சிவபெருமானுக்கு உகந்தது என்பதாலேயே ''ஆதிரையான்'' எனவும், ''ஆதிரைநாள் உகந்தான்'' எனவும் சிவபெருமானுக்குப் பெயர்கள் வழங்கி வருகின்றன.

மிகப் பழமையான முத்தொள்ளாயிரம் எனும் நூலிலும் சிவபெருமான் ''ஆதிரையான்'' என்று அழைக்கப்படும் சிறப்பு பின்வருமாறு பாடப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

''மன்னும் கனலி மதிநாண்மீன் என்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனை - இன்னமும்
ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரை வேலி உலகு.''

சிவபெருமான் ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், எண்ணில்லாத உலகங்கள் ஆகியவற்றைப் படைத்தும், காத்தும் வருகின்றான். அவ்வாறு இருக்க அத்தகைய அளந்தறிய முடியாத பெருமைக்குரிய இறைவனை இவ்வுலகம் ''ஆதிரையான்'' என்று புகழ்வது வியப்பிற்கு உரியதே'' என்று மேற்காணும் முத்தொள்ளாயிரப் பாடல் சிறப்பித்திருப்பது உணர்ந்து மகிழத்தக்கது.

திருவாதிரைத் திருநாளில் திருக்கோயில்களில் திருநடராசனின் திருநடனக்கோலத்தையே மெய்யன்பர்கள் அனைவரும் கண்டு ஆனந்தப்பரவசம் காணுகின்றார்கள்.

''வேதங்கள் ஆட மிகு ஆகமம் ஆடக்
கீதங்கள் ஆடக் கிளரண்டம் ஏழாட
பூதங்கள் ஆடப் புவனம் முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே''

என்று திருமந்திரம் கூத்தபிரானின் ஆனந்த நடனத் திருக்கோலத்தைப் போற்றிடக் காணுகின்றோம்.

அண்டகோடிகள் யாவும் அசைவுபெற்று இயங்கும் பொருட்டு, சிவபெருமான்தானே ஆடல்வல்லானாக

ஆடி உலகங்கள் யாவையும் இயக்குவிக்கின்றான். சிவ பெருமான் நடராசனாக ஆடல் இயற்றாவிடில் உலக இயக்கம் இல்லை என்பதையே அவன் நடராஜவடிவம் நமக்கு உணர்த்துகின்றது என்பதனை அருளாளர்களும் தத்துவமெய்ஞ்ஞானிகளும் நமக்கு நன்கெடுத்து விளக்கி யுள்ளார்கள்.

''தோற்றம் துடியதனில் தோயும்திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்றுமலர்ப் பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு''

என்பது உண்மை விளக்கப் பாடல்.

நடராசப் பெருமான் வலக்கரத்தில் ஏந்தியுள்ள துடி படைத்தல் தொழிலை உணர்த்துகின்றது. அபயக் கரம் காத்தல் தொழிலை உணர்த்துகின்றது; இடக்கரத் தில் இறைவன் கொண்டுள்ள அக்கினி அழித்தல் தொழி லையும், அவர்தம் ஊன்றிய திருவடி திரோதானம் என்னும் மறைத்தல் தொழிலையும், அவர்தம் தூக்கிய திருவடி அனுக்கிரகம் என்னும் அருளுதலையும் குறிப்பன.

இதனையே திருமூலரும் திருமந்திரத்தில்

''அரன்துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன்அங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற் றணைப்பில் அமரும்திரோதாயி
அரனடி என்றும் அனுக்கிரகம் அன்றே''

எனக் கூறுகின்றது.

உலகத்தின் தோற்றம் முதல் அனைத்துத் தத்து வங்களும் நடராஜர் வடிவத்துள் அடக்கம் என்பதால்தான் அவரது நடனத்தை மேலை நாட்டினரும் Cosmic Dance என்று வியந்து பாராட்டுகின்றனர்.

மார்கழித் திருவாதிரை விழாவில் ஆருத்ரா தரிசனத்திற்கு நடராசப் பெருமான் எழுந்தருளும் வைப வத்தில், எம்பெருமான் இயற்றும் ஐந்தொழில்களும் உணர்த்தப்படுகின்றன. நடராஜர், அபிசேக மண்டபத் திற்கு எழுந்தருளுவது படைத்தல் தொழிலையும், அபி ஷேகம் கொள்ளுதல் காத்தல் தொழிலையும், வெள்ளை வஸ்திரத்தால் மறைத்து வைத்தல் அழித்தல் தொழிலை யும், சாந்து கொடுத்தல் மறைத்தல் தொழிலையும், திரு வீதி உலாவருதல் அருளல் தொழிலையும் உணர்த்து வனவாகும்.

இறைவன் ஐந்தொழில் இயற்றுவதற்காக ஆடும் திருச்சபைகளில் பழமையும் பெருமையும் மிக்கனவாக ஐந்துசபைகளை நமக்கு நம் ஆன்றோர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

அவற்றின் விவரம் பின்வருமாறு:

தலம்	அம்பலம் (சபை)	தாண்டவம்
1. சிதம்பரம்	பொன்னம்பலம்	ஆனந்ததாண்டவம்
2. திருவாலங்காடு	இரத்தினசபை	காளிதாண்டவம்
3. மதுரை	வெள்ளியம்பலம்	கௌரி தாண்டவம்
4. திருநெல்வேலி	தாமிரசபை	முனிதாண்டவம்
5. திருக்குற்றாலம்	சித்திரசபை	திரிபுரதாண்டவம்

சிவபெருமானுக்கு இப்பூவுலகில் ஆயிரம் தலங் கள் இருந்தாலும் இதயமாக விளங்கும் திருத்தலம் சிதம்பரமே ஆகும். வியாக்ரபாதர், பதஞ்சலி முனிவர், தில்லை மூவாயிரவர், சிவகாமி அம்மை, திருமால், பிரம்மா, இந்திரன் முதலான தேவாதி தேவர்கள் காண பொன்னம்பலத்தில் சிவபெருமான் ஆனந்த நடனம் ஆடினார்.

இத்தகைய ஆனந்த நடனம் சிவபெருமான் ஆடிய சிதம்பரம் திருக்கோயில் பல தத்துவ நுட்பங் களைக் கொண்டு விளங்குவது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தின் நான்கு கோபுரங்கள் நான்கு வேதங் கள் ஆகும். ஆயிரக்கால் மண்டபம் யோகிகள் உணரும் ஆயிரம் இதழ்த்தாமரை (ஸஹஸ்ரார கமலம்) ஆகும்.

சிவகங்கைத் தீர்த்தம், ஸஹஸ்ரார கமலத்தினின்று ஊற்றெடுத்துப் பெருகும் அமுதவாவி ஆகும்.

நடராஜர் சந்நிதி முன்புள்ள ஐந்துபடிகள், திரு வைந்தெழுத்துக்கள் ஆகும். 96 பலகணிகள் 96 தத்துவங் களைக் குறிக்கும். அங்குள்ள 4 தம்பங்கள், நான்மறைத் தெய்வங்களையும், 28 கம்பங்கள் 28 ஆகமங்களையும் குறிக்கும்.

விமானத்தின் மேலுள்ள 9 கலசங்கள் நவசக்தி களைக் குறிக்கும், 64 கழிகள் 64 கலைகளையும் அங்கு வேயப் பெற்றிருக்கும் 21600 பொன் ஓடுகள், நாம் நாள்தோறும் சுவாசிக்கும் 21600 மூச்சுகளையும் குறிக்கும். அப்பொன் ஓடுகளை இணைத்துள்ள 72000 ஆணிகள் நம் உடலில் இருக்கும் 72000 நாடி நரம்புகளையும் குறிக்கும். இவ்வாறு சிதம்பரம் திருக்கோயில் அமைப்பு பல தத்துவ நுட்பங்களைக் கொண்டு விளங்க உலக இயக்கத்திற்குக் காரணமான ஆனந்த தாண்டவத்தை ஆடி யருளுகின்றார் சிற்சபை பொலியத் திருநடம்புரியும் அற்புதக் கூத்த பெருமான். இதனை நமக்கெல்லாம் உணர்த்தும் ஒப்பற்ற திருவிழாவே திருவாதிரை விழா வாகும்.

திருவாதிரை விழா அனைத்துச் சிவாலயங்களி லும் கொண்டாடப்பட்டு வருவதால் கலையழகுமிக்க நடராசர் திருமேனி இடம்பெறாத சிவாலயங்களே இல்லை என்று கூறலாம்.

இவற்றில் கோனேரிராசபுரம், சிவபுரம் உள் ளிட்ட நூற்றுக்கு மேற்பட்ட சிவாலயங்களில் விளங்கும் நடராசர் திருமேனிகள் சிற்பக்கலை சிறப்பாலும், இதர பல சிறப்புக்களாலும் பெருமை பெற்று விளங்கும் அருமைப்பாட்டினை மெய்யன்பர்கள் உய்த்துணர்ந்து இன்புற வேண்டுதல் அவசியமாகும்.

இவற்றுள் தேவார வைப்புத் தலமான பேரூர், மேலைச் சிதம்பரம் எனவே அழைக்கப்படுகின்றது. சுந்தரமூர்த்தி நாயனார் ''குடகத்தில்லை அம்பலவாணன் நின்று ஆடல் விரும்பும் இடம்'' எனப் பேரூரை மேலைச் சிதம்பரமாகப் பாடியிருக்கும் சிறப்பு குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

திருக்கோயில்கள் அனைத்திலும் நடராஜப் பெரு மான் திருவுருவம் தெற்கு நோக்கியே அமைக்கப்பட் டிருத்தலின் தத்துவ நுட்பம் யாதெனில் தன்னை வழி படும் அடியவர்கட்குத் தெற்கேயுள்ள எமராசனால் யாதொரு துன்பமும் நேராமல் காத்தல் பொருட்டே என்று ஆன்றோர்கள் விளக்கம் தருகின்றனர்.

திருவிளையாடற் புராணம் இயற்றியுள்ள பரஞ் சோதி முனிவர் செந்தமிழ்மொழியின் பால் கொண்டுள்ள காதலாலும், தென்றல் காற்றின் மேல் உள்ள விருப்பி னாலும், நடராசன் தென்பால் உகந்து ஆடுவதாகப் பாடியுள்ள நயமிக்க பாடல் பின் வருமாறு:

''கடுக்கவின்பெறு கண்டனும்
தென்திசை நோக்கி
அடுக்கவந்து உவந்து ஆடுவான்
ஆடலின் இளைப்பு
விடுக்க, ஆரமென் கால்திரு
முகத்திடை வீசி
மடுக்கவும், தமிழ் திருச்செவி
மாந்தவும் அன்றோ''
(திருவிளையாடல் புராணம்)

மதுரையம்பதியில் இராசசிம்ம பாண்டியன் வேண்ட கால்மாறியாடிய திருக்கோலத்தில் நடராசர் விளங்கும் சிறப்பும், திருஞானசம்பந்தர் பதிகம்பாட, கொல்லி மழவன் மகள் உற்ற முயலகன் நோய் தீர்த் தருளிய காரணத்தால் திருப்பாச்சிலாச்சிரமத்தில் தம் ஊன்றிய திருவடியின் அடியில் முயலகனுக்குப் பதி லாகப் பாம்பு மேல் நின்றாடும் சர்ப்பநடன மூர்த்தி திருக்கோலம் கொண்டு விளங்குதல் போன்ற சிறப்பு களும் நாம் அறிந்து இன் புறத்தக்கன்வாகும்.

இனி, திருவாதிரை விழாவன்று அடியவர்க்கு வழங்கப்படும் திருவாதிரைக் களி பிரசாதமும் அதன் சிறப்பும் இங்குநாம் எண்ணி மகிழத்தக்கது.

மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் ஓடாது தடைப்பட்டு நின்ற திருத்தேரினைத் திருப்பல்லாண்டு பாடித் தானே ஓடி நிலையினை அடையுமாறு செய்த அருளாளர் தாம் சேந்தனார்.

இவர் பாடியுள்ள திருவிசைப்பா மற்றும் திருப் பல்லாண்டுப் பாடல்கள் ''ஒன்பதாம் திருமுறை''யில் இடம் பெற்றுள்ள சிறப்பு எண்ணிப் போற்றுதற் குரியது.

சிவபெருமானின் அளப்பரும் வான் கருணையை இவர்தம் திருப்பல்லாண்டுப் பாடல்கள் நமக்கு நன்கு எடுத்து இயம்புகின்றன.

''பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே''
(திருப்பல்லாண்டு 9)

''தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கு இவ்வண்டத்தோடும் உடனே
பூதலத்தோரும் வணங்கப்
பொற்கோயிலும் போனகமும் அருளிச்
சோதிமணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே''
(திருப்பல்லாண்டு 10)

என நம் சேந்தனார் பாடியுள்ள திருப்பல்லாண்டு திருப் பாடல்கள் சிவபெருமானின் அளவிறந்த வான் கருணையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் நம் உள்ள முருக எடுத்துக்காட்டுகின்றன.

தில்லையில் தம் மனைவிமக்களுடன் வாழ்ந் திருந்த சேந்தனார் விறகுவெட்டி விற்று வாழ்ந்துவந்தார். ஒவ்வொரு நாளும் தமக்கு வரும் ஊதியத்தில் ஒரு சிவ னடியாரை உண்பித்துப் பிறகு மிஞ்சியதைத் தம் மனைவி மக்களுடன் உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் சேந்தனார், ஒருநாள் கூத்தப்பெருமானே சிவனடியாராக சேந்தனாரின் வீட்டிற்கு எழுந்தருளினார். தம்பசியை நீக்கி அமுதிடுமாறு சேந்தனாரை வேண்ட சேந்தனாரும் தாம்

கந்தையில் முடிந்துவைத்திருந்த களிஉணவினை அவருக்குப் பரிவுடன் வழங்கினார்.

தம் அன்பர்கள், பரிவுடன் வழங்கும் எளிய களி உணவும் தமக்கு ஆரமுதாகும் என்று அவனிக்கு உணர்த்தும் வகையில் நடராசப்பெருமான் திருவாதிரையாகிய அந்நன்னாளில் சேந்தனார் தமக்குப் பரிவுடன் வழங்கிய களியினைத் தம் திருமேனியிலும், திருக்கோயிலிற் பல இடங்களிலும் அக்களிஉணவு சிதறிக்கிடைக்குமாறு செய்தருளினார்.

இதுபற்றியே திருவாதிரைத்திருவிழாவிற் கூத்தப் பெருமானுக்குக் களியுணவு படைக்கும் வழக்கம் ஏற்படுவதாயிற்று என்பதை அறியும்போது, எளிவந்தபிரானாக விளங்கும் எம்பெருமான் திருக்கருணையை விளக்கும் ஒப்பற்ற விழாவாகவும் திருவாதிரைத்திருவிழா திகழ்ந்திடக் காணுகின்றோம்.

இத்தகைய திருவாதிரை விழாவின் சிறப்பினைப் பேரூர்ப்புராணமும், திருவாதிரை நாளில் நடராஜப் பெருமான் அபிஷேகம் கண்டும், பிரசாதம் பெற்றும் இன்புறுவோர் சிவபெருமானின் பேரருள் இன்பக் கடலில் திளைப்பர் என்று சுட்டுகின்றது. அப்பாடல் பின்வருமாறு:

''சிலையாம் மதியின் வைகறையில்
தினமும் பூசை இயற்றுவோர்
தொலையா மலமும் துமிய, அருட்
துறையில் குளிப்பார், அம்மதியின்
நிலை ஆதிரையின் நெய்யாட்டி
நிகரில் கலவை இனிதணிவோர்
அலையா தருளிற் கலந்தின்ப
ஆழி படிவர் அக்கணமே''

மார்கழி மாதம் மிகவும் குளிரும் மாதம் ஆகும். இக்குளிர்ந்த மாதத்தில், குளிர்ந்த திருவாதிரைத் திருநாளில் தில்லை நாயகனான நடராசப் பெருமானுக்கு அபிஷேகம் நடைபெறுவதைக் காணுகின்ற அப்பைய தீட்சிதர் என்ற மெய்யடியார்

''பெருமானே! உன் சிரசில் குளிர்ந்த கங்கையும், சந்திரனும் உள்ளன. உன்அருகில் உள்ள அம்மையும், பனியால் மூடிய மலையின் மகள். எனவே அவளும் குளிர்ந்திருப்பாள். இவை போதா என்று குளிர்ந்த சந்தனம் முதலானவை கொண்டு உமக்கு அபிடேகம் செய்தால், இவ்வளவு குளிரையும் நீ எவ்வாறு தாங்குவாய்? ஐயனே! என் இதயத்தில் ஆசை, கோபம் போன்ற கெட்ட குணங்கள் ஆகிய நெருப்பு உள்ளது. ஆகவே நீ உன் குளிரான துன்பம்நீங்க, என் நெருப்பான மனத்தில் வந்து குடி புகுவாயாக'' என்று தன் மனத்தில் குடிகொள்ளுமாறு நடராசப் பெருமானை நயம்பட அழைக்கின்றார்.

இன்னொரு புலவரும், இதே போல் நயமாக கயிலைமலையான கல்லில்வாழும் நீ, என் நெஞ்சமான கல்லிலும் வந்து குடியிருக்கலாமே என நயம்படப் பாடியுள்ள பாடல் பின்வருமாறு:

''புலியூர் உறையும் புனிதா! புகுவெண்
புலியூர் தொறுமிரக்கும் பண்பா - பொலிகயிலைக்
கல்லிருக்கக் கடனானால் என்நெஞ்சக்
கல்லிருக்கக் கடன்''

இத்தகைய பக்தி உணர்வோடு நாமும் திருவாதிரைத் திருநாளில் திருவாதிரையான் திருநடன தரிசனம் கண்டு வாழ்வின் பயனைப் பெற்று இன்புறுவோமாக.

'' வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வான்செவிகள்
வாழி அவனை வணங்குமுடிச் சென்னி
வாழி அவன் சீர்பாடும் வாய்''

- குமரகுருபரர்

'' கற்பனை கடந்த சோதி
கருணையே உருவம் ஆகி
அற்புதக் கோலம் நீடி
அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரம வியோம மாகும்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற
பூங்கழல் போற்றி! போற்றி!

- சேக்கிழார்

★★★

''திருக்கோயில்'' இதழ் உறுப்பினர் ஆவீர்

ஆயுள் உறுப்பினர் கட்டணம் ரூ. 500

ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ. 60

அரிய ஆன்மீகக் கட்டுரைகளைத் தாங்கிவரும் ''திருக்கோயில்'' இதழுக்கு உறுப்பினர் ஆக விழையும் அன்பர்கள்

''உயர்திரு
ஆணையாளர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034

என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை எடுத்து அனுப்பி வைத்திட வேண்டுகின்றோம். வங்கி வரைவோலையில் ''ஆணையாளர்'' எனக் குறிப்பிடுதல் போதும்.

மழை பொழிவிக்கும் மார்கழி நீராடல்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

நாடும், வீடும் வளம் பெறுவதற்காகவே மாதங் களில் சிறந்த மார்கழி மாதத்தில், திருப்பாவையும் திரு வெம்பாவையும் ஓதி, வைகறைப்பூசை போற்றுமாறு நம் தமிழ்நாடு செய்த மாதவப்பயனால் தோன்றிய பெருமை மிக்க ஆண்டாளும், மாணிக்கவாசக சுவாமிகளும் அரு ளிச் செய்துள்ளார்கள்.

மார்கழிநீராடலால் நாடும், மக்களும் நலம்பெற திங்கள் மும்மாரி பொழிவது திண்ணமாகும்.

''மாரியின்றி ஒரு காரியமும் இல்லை'' ஆவது தெளிவு. மழைநீரினாலேயே மண்ணுலகமும், உயிர்கள் யாவும் தழைத்து இன்புறுதலால், மழைநீரையே அமிழ் தம் என்று போற்றியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை.

''வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று'' (குறள்.11)

என்பது திருக்குறள்.

''நீர்இன்றி அமையாது உலகு'' என்பதை உணர்ந்தே அத்தகைய விண்நீர் பொய்யாது பெய்திட, மார்கழி மாதம் வைகறைப்பூசை செய்து, வான்மழை யாகிய அமிழ்தத்தை வேண்டியுள்ளனர் நம் முன் னோர்கள்.

மார்கழி நீராடலால் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்யும் என்பதைச் சூடிக்கொடுத்த சுடர்க் கொடி ஆண்டாள் திருப்பாவையில்,

''ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும்மாரி பெய்து
ஓங்குப் பெருஞ்செந்நெல் ஊடு கயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம் குறைக்கும் வள்ளல்பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்''

என்று அறிவுறுத்தியிருக்கக் காண்கின்றோம்.

தனு, கரணம், புவனம், போகம் ஆகியவற்றை உயிர்களுக்கு அருளும் இறைவனுக்கு நன்றிகாட்ட நாம் ஆற்றுவதே இறைவழிபாடாகும். அவ்வழிபாடுகளில் தட்சிணாயண காலத்தின் இறுதியாகத் தேவர்களுக்கு விடிகாலைப் பொழுதாக உள்ள மார்கழியில் ஆற்றும் வழிபாடு, பிரம்மமுகூர்த்த வழிபாடாக ஏற்கப்பட்டு, நமக்கு வேண்டிய நன்மைகள் யாவும் தடையின்றி நிக ழும் என்பதாலேயே மார்கழி நீராடலையும் வழிபாட் டினையும் நமக்கு நம் அருளாளர்கள் வற்புறுத்தியுள்ளார் கள். சைவ, வைணவ பேதம் இன்றி அனைத்துத் திருக் கோயில்களிலும் தனுர்மாதபூசை சிறப்பாகச் செய்யப்படு வதையும், திருக்கோயில்களில் திருப்பாவை, திருவெம் பாவை சிறப்பாக ஓதப்படுவதையும், தெய்வவழி பாடன்றித் திருமணம் போன்ற பிற மங்கல காரியங்களுக் குக்கூட மார்கழி மாதத்தில் இடம்இல்லைஎன்பதா லேயே வழிபாட்டால் பெருமைபெறும் மார்கழிமாதம் பீடுமிக்க மாதமாகப் போற்றப்படுவதையும் ''தை பிறந் தால்வழி பிறக்கும்'' என்ற நம்பிக்கையோடு மக்கள் மார்கழி நீராடலில் ஈடுபடுவதையும் நாம் காணு கின்றோம்.

பொதுவாக, நம்தமிழ்நாட்டிற்கு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவக்காற்றால் ஜீலைமுதல் நவம்பர் முடிய உள்ள மாதங்களில் பருவமழை பொழி வது வழக்கமாக இருந்து வருகின்றது. இவ்வாண்டு பருவமழை காவிரிநீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நன்கு பெய்து, மூன்றுமுறை மேட்டூர்அணை குறுகிய கால அவகாசத்தில் நிரம்பி இயற்கை நமக்குத் திருவருள் புரிந்துள்ளது என்றபொழுதும், சென்னை மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் போதிய பருவமழை பெய்யாத காரணத்தால், சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய ஏரிகளில் போது மான அளவு நீர் நிரம்பவில்லை என்ற வருத்தம் வாட்டும் இந்நேரத்தில், நம்முன்னோர்கள், அருளாளர்கள் அறி வுறுத்தியுள்ளவாறு மாணிக்கவாசக ரையும், ஆண்டாளையும் நாம் வேண்டி நம்துணைக்கு அழைத்துக்கொண்டு, தினந்தோறும் திருப்பாவையும், திருவெம்பாவையும் ஓதி மழைவேண்டி வழிபாடு இயற்றுவது அவசியக் கடமையாக உள்ளது.

மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் மேகம், பராசக்தியின் மேனிவண்ணம்போல் கருமைகொண்டு, பராசக்தியின் சிற்றிடை போல் மின்னல் உண்டாகி, அன்னையின் பொற்சிலம்புகள் முழங்குவதுபோல் இடி முழங்கி, அன்னையின் திருப்புருவம்போல் வானவில் லும் தோன்ற, பராசக்தியின் திருவருள்போல் பாரெல் லாம் உய்ய மழைபொழியவேண்டும் என்று திரு வெம்பாவையில் மழைவேண்டிப்பாடும் பாடல் பின் வருமாறு:

***

''முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்''
(திருவெம்பாவை -16)

மாணிக்கவாசகரைப் போலவே ஆண்டாளும் திருப்பாவையில் மழையை வேண்டுகின்றார். கண்ணன் கைச்சுருக்காமலும், காலந்தாழ்த்தாமலும் மழை பொழிவிக்க வேண்டும் என்று வேண்டும் ஆண்டாள், மேகமானது கார்மேக வண்ணன் எனவே பெயர்கொண்டு விளங்கும் கண்ணனைப் போல் மெய்கறுத்து, அவனுடைய சுதர்சனச் சக்கரம்போல் மின்னல்மின்னி, அவன் பாஞ்சன்னிய வலம்புரிசங்கினைப்போல் இடிமுழங்கி, அவன் கைவில்லாகிய சார்ங்கம் அம்புமழை பொழிவதைப்போல் உலகம் வாழ மழைபொழியவேண்டும் என வேண்டும் திருப்பாவைப்பாடல் பின்வருமாறு:

''ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந்தோளுடைப் பத்மநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோர் எம்பாவாய்''
(திருப்பாவை -4)

''நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை''

என்ற ஔவையார் அருள்வாக்கின்படியும், நல்ல மெய்யன்பர்கள் இம்மங்கல மார்கழியில் மனமுருகி வைகறைப்பூசை செய்து திருப்பாவையும், திருவெம்பாவையும் ஓதி அவற்றிலும் முக்கியமாக ''ஆழிமழைக் கண்ணா'' ''ஓங்கி உலகளந்த'' எனத்தொடங்கும் திருப்பாவைப் பாசுரங்களையும், ''முன்னிக் கடலைச் சுருக்கி'' எனத் தொடங்கும் திருவெம்பாவைப்பாடலையும் நாளும் ஓதிவழிபட, பெய்யத் தவறிய பருவமழை இன்று முதலே பெய்து, நீர்நிலைகள் நிறைந்து நம்மைக் காப்பாற்றும் என்பது திண்ணம் ஆகும்.

தேவாரத்தில் திருஞானசம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப்பண்ணில் பாடியுள்ள 1.திருக்கழுமலம், 2. திருவையாறு 3. திருமுதுகுன்றம் 4. திருவீழிமிழலை 5.. திருக்கச்சிஏகம்பம் 6. திருப்பறியலூர் வீரட்டம் 7.திருப்பராய்த்துறை ஆகிய ஏழு திருப்பதிகங்களும் மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள் எனப் போற்றப் படுகின்றன. இவற்றையும் ஓதுவாமூர்த்திகள், மெய்யன்பர்கள் நாளும் மனமுருக ஓதி, மாநிலம் தழைக்க மழை வேண்டலாம்.

''பார்மேல் கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலை வருமோ?'' என்று திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் மனவருத்தமுற்று, வான்ஆகி, நிலன்ஆகி, அனலும்ஆகி, மாருதம் ஆய், இருசுடர்ஆய், நீரும்ஆகி, ஊன்ஆகி, உணர்வும்ஆகி, உலகங்கள் அனைத்தும்ஆய், உலகுக்கு அப்பால், ஆனாத வடிவு ஆகிநின்ற இறைவன் செய்யஅடிபரவிப்பாடி வழிபட்ட வேளையில்,

''அவனிமிசை மழைபொழிய உணவுமல்கி
அனைத்துஉயிரும் துயர்நீங்கி அருளினாலே
புவனம் எலாம் பொலிவு எய்தும் காலம்''

எய்திற்று என்று எடுத்தியம்புகின்றது பெரியபுராணம். ஆகவே இறைவழிபாடே ஞாலத்தைக் காக்கும் என்பது திண்ணம். மார்கழி நீராடி எல்லாம்வல்ல இறையருளால் மாநிலம் தழைக்க மழையும், நம் இல்லம் தழைக்க இனிய வாழ்வும், பெற்று உய்வடைவோமாக!

''போற்றி யருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால்நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்''
-திருவெம்பாவை

''அன்றிவ் வுலகம் அளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையா எடுத்தாய் குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும் நின்கையில் வேல் போற்றி
என்று என்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோர் எம்பாவாய்''
- திருப்பாவை.

★★★

காத்யாயனீ விரதமும், மகரசங்கராந்தி என வழங்கப்படும் பொங்கல் திருவிழாவும்

– திருமதி மீனாட்சி கோகுலவாசன்

பூமியில் சிறந்தது பாரதம்! பாரத நாட்டின் மூலமே எங்கும் தர்மம் சொல்லப்பட்டது. எம்பெருமான் அவதரிப்பதும் இங்கே; அனைத்து நலன்களுக்கான வழிகளை விரிவாக உரைக்கும் 'வேதம்' விளங்கத்தொடங்கியதும் இங்கே; வேதத்தின் பொருளான திருமாலிடம் அன்பை வளர்க்க தமிழ் மறைகள் தோன்றி, பகவானிடம் அடங்காத காத லுடன் அனுபவித்த ஆழ்வார்கள் தோன்றியதும் இங்கே!

ஆழ்வார்கள் ஆண்களே ஆயினும், பெண் பாவத்தில் பாடி வழிபட்டனர். இவர்களில் பூமி பிராட்டியான (பூமாதேவியானவள்) 'கோதை' என்பவள், பட்டர்பிரான் என்னும் பெரியாழ்வாரின் மகள். ''சூடிக்கொடுத்த சுடர்க் கொடி'' ஆனவள் தான் மானிடரை மணக்க இயலாது என்று, பகவானிடம் ஆசார்யர்களை தூது அனுப்பி, அவர்களுடன் எம்பெருமானின் 'தாள்' பற்றிய தாலும் 'ஆண்டாள்' எனும் பெயரை அடைந்து அரங்கனுக்கே மாலையிட்டு வாழ்வு பெற்றாள்.

ஆண்டாள், தான் மட்டும் எம்பெருமானை அனுபவித்ததோடல்லாமல், தன் பின்வரும் அன்பர்களுக்கும் பரமனை அடைவதற்கு வேண்டி இரண்டு 'திவ்ய ப்ரபந்தங்களை' அருளிச்செய்தாள். அவை திருப்பாவை, நாச்சியார் திருவாய்மொழி' ஆகும்.

மழைக்காக கோபிகா கன்னிகைகள், 'காத்யாயனீ' நோன்பு நோற்று, கண்ணனைப்பதியாக அடைந்தது போல், ஆண்டாளும், தன்னையும் அதேபோல் பாவித்து, மார்கழிமாதம் முப்பது நாளும் திருப்பாவை பாடி, விரத மேற்று, நோன்பை முடித்து கண்ணனையே பதியாக அடைந்தாள்.

கோகுலத்தில், கண்ணனைப் பதியாக அடைய, கோபியர்கள் நோற்ற நோன்பே, 'காத்யாயனீ' விரதம் ஆகும்.

ஒரு சமயம் கோகுலத்தில் கோபியர்களைக் கண்ணனுடன் பேசவும், ஆடவும், பாடவும் கூடாது என்று, பெற்றோர்கள் அவர்களை அவரவர் வீட்டில் பூட்டி வைத்தனர். அவர்கள் மனம் கண்ணனிடமே இருந்ததில், கண்ணனும் அதை அறிந்து, மழை இல்லாமல் செய்தான். இதையறிந்த அறிஞர்கள், கன்னிப்பெண்கள் நோன்பு நோற்க மழை பெய்யும் என்று சொல்ல, அனைத்துக்கன்னிப் பெண்களையும் நோன்பு நோற்க வேண்டி வெளியில் விட்டனர். அவர்கள், ஸ்ரீகாத்யாயனீ ரிஷிக்கு சேவைசெய்ய, அவரின் அனுக்கிரகத்தில், 'காத்யாயனீ' விரதமகிமை, பலன் இவைகளைத் தெரிந்து அனுஷ்டித்து ஸ்ரீகிருஷ்ணனைப் பதியாக அடைந்தனர்.

திருப்பாற்கடலில் பிறந்த மகாலக்ஷ்மியும், பர்வத ராஜனின் மகளான பார்வதியும் இரண்டு மகரிஷிகளின் தவத்திற்காக அவர்களுக்கு மகளாக அவதரித்திருக்கிறார்கள்.

பிருகு மகரிஷி, மகாலக்ஷ்மியை மகளாக அடைந்து சீராட்டி வளர்க்க வேண்டும் என்று தவம் செய்தார். அதற்கிணங்கவே மகாலக்ஷ்மியும் அவருக்கு மகளாகப் பிறந்தாள். பிருகுவுக்கு மகளானபடியால் அவளுக்குப் 'பார்கவி' என்ற பெயர் வந்தது.

இதேபோல் 'காத்யாயனீ' மகரிஷி என்பவர், பரமேஸ்வரியை மகளாக அடைய வேண்டும் என்று விரும்பி தவம் செய்தார். அதன்படி பரமேஸ்வரியும் மகளாகப் பிறந்தாள். காத்யாயனருக்குப் பெண் என்பதாலேயே 'காத்யாயனீ' என்ற பெயர் அம்பாளுக்கு ஏற்பட்டது.

கோகுலத்துக்கன்னிப் பெண்கள், விடியற்காலைப் பொழுதில், கண்ணனைப் புகழ்ந்து பாடிக் கொண்டு, கூட்டமாக யமுனை நதிக்கரை அடைந்து, நீராடி புனித ஆடைகள் அணிந்து, மண்ணினால் செய்த பிம்பத்தில், 'காத்யாயனீ' தேவியை ஆவகித்து, ஷோடசோபசார பூஜைகள் செய்து பிரசாதம் உண்டு வீடு திரும்பினர். இவ்வாறு விரதமேற்று காணும் பொங்கலான 'கனு' அன்று நோன்பை முடித்து கண்ணனைப் பதியாக அடைந்தனர்.

ஆண்டாளும், தன்னை கோபியாக நினைத்து, தான் இருக்குமிடம் கோகுலமாக பாவித்து, மார்கழி மாதம் முப்பது நாளும் திருப்பாவை பாடி, விரத

திருக்கோயில்
வாசகர்களுக்கு
எமது உளம் கனிந்த
பொங்கல்
நல்வாழ்த்துக்கள்!!

மேற்று, நோன்பை முடித்து, கண்ணனையே பதியாக அடைந்தாள்.

திருப்பாவையில் உபநிஷத்தின் பொருள் நன்கு விளங்கும். வேதத்தின் அர்த்தங்கள் ஆங்காங்கே பொதிந்து கிடக்கின்றது.

ஆண்டாள் தன் மணமாலைக்காக ஒன்று பூமாலை கட்டினாள்; மற்றொன்று பாமாலை பாடி சமர்ப்பித்தாள்.

திருப்பாவை, 'பாதகங்கள் தீர்க்கும், பரமனடி காட்டும், வேதம் அனைத்துக்கும் வித்தாகும்' என்று பலவாறு போற்றப்படுகிறது.

அத்தன் பாடியதே கீதை, அன்னை பாடியதே கோதை; அது கீதோபநிஷத், இது கோதோபநிஷத் என்றார் ஒரு பெரியார்.

மார்கழி மாதத்தைப் பீடை மாதம் என்று கூறுவார்கள். நல்ல காரியங்களான, 'திருமணம், உபநயனம், புதுமனை புகு விழா' போன்றவைகள் செய்யமாட்டார்கள். அது சமயம், அக்காரியங்களின் மேல் கவனம் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் இருக்குமாதலால், பகவானை சிந்திக்க நிம்மதியான மனம் இருக்காது. பகவானை நினைக்காவிடில், அது பீடையாக மாறும் என்பதால் அதற்குப் பீடை மாதம் என்று பொருள் ஆகும்.

கிருஷ்ணனும் 'மாதங்களில் நான் மார்கழி மாதம் ஆவேன்' என்று கூறியுள்ளார்.

மார்கழியில் பகவானை நினைத்துப் பூஜிக்க அவ் வருடம் முழுவதும், பூஜித்த பலன் உண்டு. பகவானும் தன்னை நினைத்து ஓரடி முன்வைத்தால் மூன்றடி முன் வந்து பக்தனுக்கு அருள் புரிகிறார் என்றும் கூறப் படுகிறது.

மார்கழி மாதம் தேவர்களின் காலைப்பொழுதாகும். அது சமயம் தேவர்கள் பூமியைச் சுற்றிப்பார்க்க வருவதாகவும் சொல்லுவதுண்டு. வண்ணவண்ண அழகான கோலங்களால் அலங்கரித்து, பஜனை, பாட்டு என்றும், கோயில்களை சுற்றிவருவதால், தேவர்கள் கண்டு மனம் மகிழ்ந்து அருள் புரிவர்.

மார்கழி மாதத்தின் கடைசி நாள் போகிப் பண்டிகையாகும்.

போகத்தை அனுபவிப்பவன் போகி! போகானுபவத்தில் சிறந்தவன் இந்திரன். இந்திரன் போகத்தை அனுபவிப்பதில் சிறந்தவன் ஆதலால் சிறந்த போகத்தை 'தேவேந்திர போகம்' என்று சொல்லுவார்கள். அவனைப் போல் நாமும் சகல போகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று கோகுலத்தில் அன்று இந்திரனை நினைத்து பூஜைகள் செய்து வழிபட்டார்கள்.

இந்திரனுக்கு சிறப்பாக பூஜை செய்து வந்த தினமே போகிப்பண்டிகை எனும், மார்கழி மாதம் கடைசி நாள் ஆகும்.

மார்கழி மாதம் பொங்கலை முன்னிட்டு வீடுகளில் சுண்ணாம்பு அடித்து சுத்தம் செய்து விடுவார்கள்.

போகி அன்று விடியற்காலை, போகிகொளுத்து வது என்பார்கள். வீட்டிற்கு எதிரே தீ மூட்டி பழைய துணிகள், பாய்போன்றவைகளைக் கொளுத்தி எரித்து விடுவார்கள். அதன் நோக்கம் வீட்டைச் சுண்ணாம்பு அடித்து, கோலங்கள் வரைந்து அலங்கரிப்பதுபோல், நாமும் நமது காமம், கோபம் முதலிய துர்க்குணங்களைப் போகி கொளுத்துவதுபோல் எரித்து, பக்தி ஞானம் புண்ய கர்மம் ஆகியவற்றை ஏற்று, அன்று முதல் சிறப்பாக நடந்து, நமது ஜீவனுக்கு நன்மை தேட வேண்டும் என்பதாகும். மேலும் போகி கொளுத்துவதால், பழைய பொருள் களிலுள்ள நோய்க்கிருமிகள் அழிந்துவிடு வதும் இங்கு எண்ணத்தக்கது.

போகி அன்று காலை மங்கல நீராடி, புத்தாடை கள் அணிந்து, ஐந்துவித பலகாரங்களுடன், இனிப்பு வகைகளுடன், போளி, வடை, பாயசம், பச்சடி, காய் கறிகளுடன், பழங்களுடன் படைத்து, உறவினர்களுடன், குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக உண்ணவேண்டும் என் பதாகும்.

மறு நாள் மகர சங்கராந்தியாகும், அதாவது, சூரியன் மேஷராசியில் பிரவேசிக்கும் நாள், 'மகர சங்க ராந்தி' புண்ணிய காலம் எனப்படும்.

பஞ்சாங்கங்களில் சங்கராந்தி பலன் என்று சங்க ராந்தி புருஷனது சொரூபம், வாகனம், உணவு, ஆபரணம் முதலியவைகளைக் கூறி, அதனால் ஏற்படும் பலாபலன் களையும் விரிவாகக் குறிப்பிட்டிருப்பார்கள்.

பன்னிரெண்டு மாதங்களிலும், மாதத்தின் முதல் நாள் புண்ணிய காலமாகக் கருதப்படும். அதுசமயம், புண்ணிய நீராடல் பித்ருதர்ப்பணம், ஜபம், தானம் முத லியவைகளைச் செய்தால் மற்ற நாட்களில் செய்வதை விட அதிக பலனைத் தரும். அது சமயம் செய்ய இய லாதவர்கள் 'சித்திரை வருடப்பிறப்பு, தக்ஷிணாயண புண்ணிய காலம், துலாமாதம், உத்திராயண புண்ணிய காலம் என்ற இந்நான்கு காலத்திலாவது அவசியம் தர்ப்பணம் செய்ய வேண்டும்.

'உத்திராயணம்' என்பது தைமாதம் முதல் ஆனி மாதம் முடியும் வரை ஆறுமாத காலமாகும். 'தக்ஷிணாயனம்' என்பது ஆடிமாதம்' முதல் மார்கழி மாதம் முடியும் வரை ஆறு மாதகாலமாகும். இவ் விரண்டும் சேர்ந்ததுதான் தேவர்களின் ஒரு நாள் ஆகும். தேவர்களின் பகல் காலமான உத்திராயணத்தில் தான் 'உபநயனம், திருமணம், கிரகப்பிரவேசம் (புதுமனை புகுவிழா) போன்ற நற்காரியங்களைச் செய்ய வேண்டும். இறப்பவர்களுக்குக் கூட உத்திராயணம் என்றால் நல்லது என்றும், தக்ஷிணாயணம் என்றால் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்றும் சொல்லுவார்கள்.

இந்திரனுக்குத் தம்பியாக அவதாரம் பண்ணின வாமனரை, உபேந்திரன் என்பார் கள். திரிவிக்கிரமன் என்ற பெயரும் உண்டு.

இந்திரன் தான் செய்த தவறை உணர்ந்து, கிருஷ்ண னான நாராயணரையே பூஜிக்க வேண்டும் என்று வேண்டி னான். இந்திரனின் விருப்பப்படி, அவனைத் தனி யாகப் பூஜித்ததை நிறுத்தியதில், இந்திர உபேந்திருடன் சேர்ந்து, உத்திராயணமான தைமாதம் முதல் நாள் 'சங்க ராந்தி' என்னும் பொங்கல் நன்னாளாகக் கொண்டாடு கிறார்கள். அன்றைய தினம் சூரிய நாராயண பூஜையே மிகச்சிறந்ததாகும். சூரிய நாராயண பூஜையை 'இந்திரோ பேந்த்ர சகித சூரிய நாராயணபூஜயாமி' என்று சொல்லி பூஜை செய்ய வேண்டும்.

தினமும் நாம் சூரியனை, 'காயத்ரீ' மந்திரத்தா லும், சூரிய நமஸ்காரத்தாலும் வணங்குகிறோம். ஆரோக் கியமான வாழ்விற்கு நாம் தினமும் சூரியனை வணங்க வேண்டும்.

சங்கராந்தி அன்று சூரிய நாராயணனாக நமக்கு அருள் புரிவதால், அன்றைய தினம் சர்க்கரைப்பொங்கல், வடை, கரும்பு, மஞ்சள், இஞ்சியுடன் சகலவிதமான உணவு வகைகளை சூரிய நாராயணனுக்குப் படைத்து, நாமும் மகிழ்ச்சியாக உறவினர்களுடன், நண்பர்களுடன் உண்ணவேண்டும்.

பொங்கல் பண்டிகையை அவரவர் வீட்டுப் பழக்கப்படி செய்வது நல்லது.

கிராமங்களில் புதுநெல் அறுத்து, புதுப் பானை யில் பொங்கலிட்டுச் சூரியனுக்குப் படைப்பார்கள்.

சங்கராந்தி அன்று புத்தாடைகள் அணிந்து பெரி யோர்களை தரிசித்து, அவர்களிடம் ஆசி பெற வேண் டும். இயன்றவரை ஏழை எளியோருக்கு தானம் செய்ய வேண்டும். கோயில்களுக்குச் சென்று பகவானை தரிசித் தல் வேண்டும். இன்றைய தினம் செய்யும் தானதர்மங் கள், தாம்பூலம் இவைகளுக்குப் பலன்கள் எழுத்தில் அடங்காததாகும். அஸ்வமேதயாகங்கள் செய்த, கோடி பலன்களைச் சொல்லியுள்ளார்கள்.

சூரிய மண்டலத்தின் நடுவில் நாராயணன் இருக் கிறார் என்றும், சூரிய மண்டல மத்தியில் இருப்பவர் பரமசிவன் என்றும் புராணங்கள் விவரிக்கின்றன.

நவக்கிரகங்களில் முதல்வர் சூரியன் என்னும் ஆதித்யன்.

சத்ரஜித் என்ற அரசர் சூரியனை உபாசித்ததில் தங்கத்தைக் கக்கும்படியான 'ஸ்யமந்தகமணி'யைப் பெற்றார்.

ஸ்ரீராமர் சூரியனை உபாசித்து இராவணனை ஜெயித்தார்.

சூரியனை வேண்டி பாண்டவர்கள் அட்சய பாத்திரம் பெற்றனர்.

சாம்பன் என்ற கிருஷ்ணனுடைய மகன் சூரியனைப் பூஜித்ததில் குஷ்டரோகத்திலிருந்து நிவர்த்தி அடைந்தான்.

சங்கராந்தியன்று பெரியவர்கள் தங்களிடம் ஆசி கோரி வரும் பெண்களிடம் புது மஞ்சளினால் அவர்களது தாலிச் சரட்டில் தேய்த்துக் கொண்டு, நன்மைகள் பல கிடைக்க வேண்டும் என்று ஆசிவழங்குவார்கள்.

மாட்டுப்பொங்கல் அல்லது 'கனு, காணும்' பொங்கலன்று பெண்கள் தம் பிறந்த வீட்டின் விருத்திக்காகவும், சகோதரர்களின் நன்மைக்காகவும் வேண்டி, காக்கைக்கும் கலந்த அன்னம் 'மஞ்சள் இலையில் மஞ்சள் குங்குமம் அட்சதையுடன் 'காக்காப்பிடி, கனுப்பிடி' என்று சொல்லி வைப்பார்கள்.

யமதர்மராஜன் காக்கை வேடம் தரித்ததால், காக்கைக்கு அன்னமிட்டால், அவர் சந்தோஷமடைந்து அருள் புரிவார் என்பதனால் 'கனு' அன்று வைப்பது பிறந்தகம் செழிப்பாக இருக்க வேண்டியே, 'காக்காப் பிடி, கனுப்பிடி' வைப்பதாகும்.

மாட்டுப்பொங்கலன்று மாடுகளுக்குப் பூஜையான 'கோ' பூஜையாகும்.

பாற்கடல் கடையும் போது தோன்றியவைகளில் 'காமதேனு' எனும் தெய்வீகப் பசுவும் உண்டு. அவளுடைய சந்ததிகள் இருக்கும் லோகம் கோலோகம் ஆகும். கிருஷ்ணர் ராதையுடன் அங்கு கோக்களுடனும், கோபிகைகளுடனும் ஆனந்தமாக வசிக்கின்றார்.

'கோவின் சரீரத்தில் அனைத்து தேவர்களும் இருப்பதால், தினமும் பசுவிற்குப் புல், வைக்கோல் தண்ணீர் கொடுத்து, பிறகு அதிதி பூஜை செய்து, உண்ண வேண்டும். அப்படி அதிதி கிடைக்காவிடில் பசுவிற்கே உணவளித்து அதன்பின் உண்ண வேண்டும் என்பர்.

பசு, காமதேனுவின் அம்சமாகும். காமதேனுவின் சந்ததியே பூலோகத்தில் கோக்களாக இருக்கின்றன. காமதேனுவின் அம்சமான பசுவிலிருந்து அதன் ஒவ்வொரு பாகமும் மனிதருக்குப் பேருபகாரம் ஆகிறது. பசுக்களின் பாலினாலும், நெய்யினாலும் வேதமந்திரத்தைக் கூறி வேதியர் யாகம் செய்கின்றனர். யாகத்தினால் மழை, மழையினால் உலக நன்மை ஏற்படுகிறது. அதனால் 'கோப்ராம்மணேப்ய: சுபமஸ்து நித்யம்' என்று கோவுக்கும், அந்தணர்களுக்கும் சேமம் உண்டாக வேண்டும் என்று வேண்டப்படுகிறது.

பசுவினால், உடல்வளர பால், தயிர்,மோர் எனவும், புத்தி வளர வெண்ணெய், நெய் எனவும், பயிர்வளர சாணம் எருவாகவும், அதன் மூத்திரம், 'பஞ்சகவ்யம்' என்று நம்மைப் பவித்திரமாக்கவும் உபயோகமாகிறது. சாணத்தைத் தட்டின எருமுட்டையால், யாகம் செய்கிறோம். அதன் சாம்பல் கூட, 'விபூதி' என்னும் பிரசாதமாகப் பயன்படுகிறது.

பசுவின் பாலினால், பகவானை அபிஷேகம் செய்கிறோம்; நெய்யினால் யாகம் செய்கிறோம். இப்படி தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் அனைத்து உயிர்களுக்கும் உபயோகமான கோவைப் போல் உதவுகிறவள் 'தாய்' ஒருவளே ஆவாள்; ஆதலால் பசு கோமாதா எனப் போற்றப்படுகிறாள்.

சகல தேவர்களும் பசுவின் சரீரத்தில் வந்து தங்கினர். லக்ஷ்மிதேவி சற்று நேரம்கழித்து வந்ததால், தனக்கும் இடம் வேண்டிக் கேட்டாள். கோதேவியோ, இங்கு இடம் எல்லாம் நிறைந்து விட்டதால் உனக்கு இடம் இல்லை' என்றாள். அதற்கு லக்ஷ்மியும், 'ஒருவருக்கும் பயன்படாத இடமாக இருந்தாலும் அந்த இடம் தனக்கு போதும் என்றாள். பசுவின் பின்புறம், மலஜலம் விடும் இடம்தான் இருக்கிறது என்று கூறியதில், லக்ஷ்மியும் அங்கே தங்கினாள். அதனால் காலையில் எழுந்தவுடன் கோவின் பின்புறத்தை தரிசிக்க வேண்டும் என்றும், கோதானம் செய்யும்போது கோவின் வாலை உருவியே தானம் கொடுக்க வேண்டும் என்றும் பழக்கல்கள் உள்ளன.

கோக்களை கிருஷ்ணர் ஆதரித்ததால் அவருக்கு கோபாலன் என்ற பெயரும் ஏற்பட்டது.

கோதூளிபட்ட அன்னத்தைச் சாப்பிடாமல் தூர எறிந்த பாபத்தால் ஒரு சிறந்த சன்யாசி, கைசிகன் என்ற சண்டாளனாகப் பிறந்தார்.

திலீபன் என்னும் அரசன், வழியில் இருந்த கோவைப்பிரதட்சிணம் செய்யாமல் போனதால் குழந்தை பாக்யம் இல்லாமல் போயிற்று. இதை அறிந்து கோவுக்குப் பணிவிடை செய்து திலீபன் ரகுவைப்பெற்றான்.

கோவின் பின்புறத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டால் கங்கா ஸ்நானம் செய்த பலன் உண்டாகும்.

பசுக்கள், காலையில் மேயச்சென்று மாலையில் வீடு திரும்புவதால், அந்த இருவேளைகளையும்

வாசகர் எண்ணங்கள்

பிறக்கும் ஈராயிரமாவது
புத்தாண்டில், யாவரும்
வாங்கிப் படித்துப் பாதுகாத்து
வைத்துப் பயன் பெறத்தக்க
பொன்னிதழ் திருக்கோயில் இதழே
ஆகும். ''திருக்கோயில்'' இதழின்
பணி மென்மேலும் சிறக்க
என் இனிய வாழ்த்துக்களைத்
தெரிவித்து மகிழ்கின்றேன்

- சு. சண்முகம், சென்னை - 600 001.

மயிலை சிவஞானஜோதி சிவசக்தி அம்மை யாரின் ''பிரார்த்தனை'' மிகவும் பயனுள்ள கட்டுரை, ''பிரார்த்தனை செய்தால் ஆத்மஜோதி ஞானசோதி யாகிச் சிவபெருமான் காட்சியைப் புருவ நடுவினில் காணமுடியும்'' என்று விளக்கிய இக்கட்டுரை, ஞான அனுபவத்தை வழங்கும் அரிய கட்டுரையாகும்.

- இரா. கணேசன், ஈரோடு.

''கம்பரின் இராமாவதாரம்'' கட்டுரையில் ஆசிரியர், பல அரிய விசயங்களை விளக்குவது அருமையாக உள்ளது. துர்வாச மகிரிஷி கையேயிக்கு அவள் ஆட்காட்டி விரல் வச்சிரம்போல் வலிமைபெற வரம் அருளிய நிகழ்ச்சியை முதன்முதலாகத் ''திருக்கோயில்'' இதழில் படித்து மகிழ்ந்தேன்.

- ம. கலையரசி, கோவை.

திருமதி மீனாட்சி கோகுலவாசன் அவர்கள் துளசியின் மகிமையை எடுத்து விளக்கியுள்ள ''ஸ்ரீ துளசி திருமணம்'' கட்டுரை அருமையாக இருந்தது.

- வி. செல்வராஜ், திருச்சி.

சைவசித்தாந்தத் தத்துவங்களையும் பாலில் ஊறவைத்த பலாச்சுளையைப் போல் மிகவும் சுவைபட வழங்க முடியும் என்பதைச் ''சிவஞானபோதத்தில் ஆன்ம ஞானம்'' கட்டுரை வாயிலாகத் தெளிவுபடுத்தியிருந்தார் சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் அருணை வடிவேலு அவர்கள்.

- திருமதி காமாட்சி சீனிவாசன், காஞ்சிபுரம்.

'கோபாததூளி நேரம்' என்று சொல்லுவார்கள். அந்நேரத்தில் நற்காரியங்கள் செய்ய விசேஷமான நேரமாகக் கருதப் படுகிறது.

கிராமங்களில் காணும் பொங்கலன்று மாடுகளின் கொம்புகளுக்கு வர்ணம் தீட்டி, மஞ்சள் குங்குமம் பூசி, அலங்கரித்து, வீதி வலம் வருவார்கள். மேலும் அன்று மாட்டை அடக்கும் போட்டிகளான 'மஞ்சுவிரட்டு' எனும் போட்டி நடைபெறும். மற்றும் ஆற்றுத் திருநாள் அன்று கலந்த அன்னங்களைக் கொண்டு (கூட்டாஞ் சோறு) சென்று, கூட்டமாக மகிழ்ந்து உண்பார்கள்.

நகரங்களில், மாட்டுப் பொங்கல் அன்று மாடுகள் உள்ள வர்கள் அன்றாவது நீராட்டி அலங்கரித்து, காலுக்குச் சலங்கைக்கட்டி, மஞ்சள், குங்குமம் அதன் உடலில் பூசி, சர்க்கரைப் பொங்கல் அளித்து, செழிப்பான புல்லை அரிந்து அளித்து, கற்பூரஹாரத்தியுடன் பூஜிக்க வேண்டும்.

பசு இல்லாதவர்கள், பசுவின் படம் வரைந்தும், படமாக இருப்பின், அதைவைத்தும் அலங்கரித்துப் பூஜிக்கலாம்.

ஆதலால் மார்கழி மாதம், 'பாவை' நோன்பு நோற்க, பகவானின் அருளால் கன்னிகைகள் நல்ல கணவனையும், மணமானவர்கள் நல்ல சந்ததிகளையும், செல்வங்களையும் பெற்று, பெருவாழ்வு வாழ்வார்கள் என்று புராணங்கள் மூலம் அறிய முடிகிறது.

ஆகவே மார்கழி மாதம் பாவை நோன்பு ஏற்று, போகத்திற்காக போகியைக் கொண்டாடி, சூரிய நாராயணரை மகர சங்கராந்தியில் வழிபட்டு, கோக்களைப் பூஜித்து, அதனை மகிழ்வித்து, காணும் பொங்கலையும் கொண்டாடி மகிழ்ந்தால், தேவர்கள் மகிழ்ந்து, வேண்டும் வரம் வழங்க, செழிப்பாக வாழலாம் என்பதே 'மார்கழியில் பாவை நோன்பு, போகி, மகாசங்கராந்தி, மாட்டுப் பொங்கல்' என்று பொங்கல் விழாவாகக் கொண்டாடுவதன் நோக்கமாகும்.

நாமும் உற்றார் உறவினர்களுடன் கொண்டாடி, நற்பலன்களைப் பெற்று, பெருவாழ்வு வாழ்வோமாக என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக....!!

'பெண் வாழ பிறந்தகம் வாழும்' என்பார்கள். அதனால் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பெண்களுக்கு, தாய்வீட்டு சீதனம் அனுப்புவது வழக்கம்.

★★★

சிவஞான போதத்தில் ஆன்ம ஞானம்

– சித்தாந்தக் கலைமணி, மகாவித்துவான்
– முனைவர் சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்

(முன்தொடர்ச்சி)

கருவிகள் ஒடுங்காத விழிப்புநிலையிலும், உயிர் உலகத்தை அறிதல் அன்றிதன்னையும் தலைவனையும் அறியமாட்டாது. உலகத்தை அறியும் பொழுதும் ஒரே நிலையாய் அறியாது நினைந்தும், மறந்தும் அறிதலும், அறியாமையும் உடையதாகவே அறியும். எக்காலத்தும் தனக்குத் தலைவனாகிய இறைவனை அவனே ஆசிரிய னாய் வந்து அறிவிக்கவே அறிதல் அன்றித் தானாக உயிர் அறியமாட்டாது. இவையெல்லாம் 'அறிவே உரு வானது' எனச் சொல்லப்படுகின்ற பிரமப் பொருளுக்கு ஒவ்வா ஆகலின், பிரமப் பொருள் உயிராமாறு இல்லை.

உயிர்களின் அறிவு சிற்றறிவும், பிரமத்தின் அறிவு முற்றறிவும் ஆதல் பற்றி, அவை முறையே 'சீவான்மா' என்றும், 'பரமான்மா' என்றும் வேறு பிரித்துச் சொல்லப் படுகின்றன. அதனால், பரமான்மா, எவ்வாற்றானும் சீவான்மா ஆகாது'' என்பதாம். ''பரமான்மா முற்றறி வுடையதாயினும் உபாதியால் அவ்வறிவு சிற்றறிவாய், சீவான்மா ஆயிற்று'' எனின் பரமான்மாவை உபாதி நிலை குலையச் செய்தது - என்றால் 'இரும்பைச் சிதல் அரித்தது என்றல் போல்வதாம்'' என்றபடி.

இதனால் ''நான் பிரமம் அல்லேன்'' என்னும் துணிவு பிறக்கும்.

7. கருவிகளின் தொகுதி தான் ஆகாமை

'பரமான்மாவே சீவான்மா' எனக்கூறும் ஏகான்ம வாதிகள், ''பிரமத்தை - அறிவுடையது என்றால் கூடாது; அறிவு என்றுதான் சொல்லுதல் வேண்டும்'' என்பர். பௌத்தரும் அவரோடு ஒத்து உயிரை அவ்வாறு கூறுவர். அவருள் ஒருசாரார் ''உடம்பையும், மற்றும் கருவி களையும் தனித் தனிச் சுட்டி, அவற்றுள் ஒன்றை உயிர் என்றல் பொருந்தாது. ஏனெனில் கருவிகளுள் ஒன்று குறையினும் அறிவு நிகழ்த்தல் இல்லை. அதனால் கருவிகள் அனைத்தும் கூடிய கூட்டமே உயிர்'' எனக் கூறுவர். அது பற்றிச் சிலர்க்கு, 'நான் கருவிக்கூட்டமே போலும்'' - என்னும் மயக்கம் உண்டாகும். அதனை மெய்கண்டார்.

''மாயா தனுவினுள் ஆன்மா''

எனக் கூறி நீக்கினார்.

அஃதாவது, ''கருவிகள் அனைத்தும் மாயை - எனப்படும் முதற் பொருளின் ஆக்கம்; அதனால் அவை நிலையற்றவை. உயிர்நிலையுடைய பொருள் என நாங்கள் கூறுகின்றோம். அதை நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டாலும்,

கருவிகள் பலவும் ஓர் யந்திரத்தின் உறுப்புக் கள் போல அமைய, அவற்றின் தொகுதி இயந்திர மாகின்றது. அதுபோலக் கருவிகள் யாவும் கூடிய கூட்டம் உடம்பாம். உறுப்புக்களின் கூட்டம் இயந்திர மாவதல்லது, இயந்திரத்தை இயக்குவோனாகாது. அது போலவே, கருவிகளின் கூட்டம் உடம்பாவதல்லது உயிராகாது'' என்பதாம்.

இதனை, ''அவைதாம் வெவ்வேறு பெயர் பெற்று நிற்றலான்'' என்பதனாலும் விளக்கினார். ''கருவிகளைத் தனித் தனிநோக்கினாலும் அவற்றுள் ஒன்றேனும் உயிர் எனச் சொல்லப்படுதல் இல்லை. தொகுத்து நோக்கினாலும், உடம்பு எனப் பெயர்பெறு வதன்றி உயிர் எனப் பெயர் பெறுதல் இல்லை'' என்பது அதன் பொருள்.

இதனால், 'கருவிக் கூட்டம் நான் அல்லேன்' என்னும் துணிவு பிறக்கும்.

நான்காம் நூற்பா - வார்த்திகம்
அகப் பொறிகள் தான் ஆகாமை

மேற் கூறியவைகளில் 'நுண்ணுடம்பு' என்பதன் உறுப்புக்களே, 'மனம், சித்தம், அகங்காரம் புத்தி' என்னும் அகப் பொறிகள், 'அவற்றின் தொகுதி உயி ரன்று' என்பதை மூன்றாம் நூற்பாவிற் கூறினார். ''அவை களைத் தனித்தனி நோக்கினாலும், அவற்றுள் ஒன் றேனும் உயிரன்று'' என்பதை நான்காம் நூற்பாவில், ''அந்தக் கரணமவற்றின் ஒன்றன்று'' - எனக் கூறினார். 'ஏன்?' என்பார்க்கு, மூன்றாம் நூற்பாவில், ஐம்பொறி கள் உயிராகாமைக்குக் கூறிய, ''ஒன்றறிந்தது, ஒன்ற றியா'' என்ற காரணமே போதியதாயினும், இங்கு வேறொரு காரணத்தையும் கூறினார். அஃதாவது,

''அவைதாம், பிரகாசமாய் நின்றே அப்பிர காசமாய் நிற்றலான்'' என்பது.

***

அஃதாவது, ''கண் முதலிய புறப்பொறிகளை நோக்க மனம் முதலிய அகப்பொறிகள் அறிவுடையன போலத் தோன்றினாலும், உண்மையில் அவை அறி வில்லனவேயாதலின், அவற்றுள் ஒன்றேனும் உயி ராகாது'' என்பதாம்.

''உண்மையில் அவை உயிராகா'' என்றது எது பற்றி எனின், மனம் புறப்பொறிகளால் கவரப்பட்ட புலன்களைத் தான் பற்றி உணரும்பொழுது, 'இஃது யாது' என அறிய அவாவிப் பின், 'இன்னது ஆமோ! ஆகாதோ' என ஐயுற்று நிற்கும். ஆயினும், 'யான் ஐயுறு கின்றேன்' என அறிய மாட்டாது.

சித்தம், மனத்தாற் பற்றப்பட்ட பொருளின் பெயர், இனம், பண்பு, தொழில், உடைமை என்ப வற்றைப் பற்றிப் பலவாற்றான் ஆராயும். ஆயினும், ''யான் ஆராய்கின்றேன்'' என அறியமாட்டாது.

அகங்காரம், 'இதனை - இன்னது - என அறுதி யிட்டுத் துணிவேன்' என எழுச்சியுற்று நிற்கும், ஆயினும், ''யான் எழுச்சியுறுகின்றேன்'' என அறிய மாட்டாது.

புத்தி, 'இஃது இன்னது' எனத் துணிந்து, சித்தம் செய்த ஆராய்ச்சிக்கு முடிவு காணும். ஆயினும், 'யான் துணிந்தேன்' என அறியமாட்டாது.

இவை பற்றியே, 'அகப் பொறிகள் அறிவுடை யனபோலத் தோன்றினாலும், உண்மையில் அறிவுடை யன அல்ல'' என்றார்.

இவ்வாற்றால், ''அகப்பொறிகளுள் ஒன்றும் நான் அல்லேன்'' என்னும் துணிவு பிறக்கும்.

இங்ஙனம் மூன்று, நான்காம் நூற்பாக்களிற் கூறியபடி பருவுடம்பு முதலிய அனைத்தையும் தனித் தனிச் சுட்டி, ''இது நான் அல்லேன், இது நான் அல் லேன்'' எனத் துணிந்து வரும்பொழுதே, ''இவைகளைக் கருவிகளாகக் கொண்டு பிற பொருள்களின் இயல்பு களை அறிபவனும், யான் காண்கின்றேன், யான் கேட்கின் றேன், யான் ஐயுறுகின்றேன், யான் துணிந்தேன் என்றாற் போல என்னியல்பை அறிகின்றவனும் ஆகிய வனே நான்'' எனத் தன்னைத் தான் உணர்தலாகிய ஆன்ம ஞானம் நிகழும். அதனானே, ''உடம்பும், அத னோடு தொடர்புடைய பொருள்களும் அறிவில்லாத ஜடப் பொருள்கள் ஆதலின், அவற்றைச் சீரிய பொருள் களாகக் கருதி அவற்றின் கண் பற்றுச் செய்தல் அறி யாமை''. என்னும் உலக ஞானமும் தோன்றும்.

கருவித் தொடர்பிற்குக் காரணம்

அப்பால், ''உலகம், உலகப் பொருள்கள், உடம்பு, உடம்பின் புறத்தும், அகத்தும் உள்ள கருவி கள் ஆகிய இவை அனைத்தும் என்னோடு தொடர் பில்லனவாய் இருக்க, எனக்கு இவற்றோடு எப்படி நெருங்கிய தொடர்பு உளதாயிற்று?'' என்னும் வினாத் தன்னைத் தான் ஆராய்வானுக்குள் எழும். அவ்வினா விற்கு மெய்கண்டார், நான்காம் நூற்பாவில்,

''அவை - சந்தித்தது ஆன்மாச் சகசமலத் துணராது'' என விடை கூறினார்.

அஃதாவது, ''ஆன்மா அறிவுடையதாயினும், செம்பிற்குக் களிம்பு, இயற்கைக் குற்றமாய், அதன் ஒளியை மறைத்தாற்போல, ஆணவ மலம் அதற்கு (ஆன்மாவிற்கு) இயற்கைக் குற்றமாய் அதன் அறிவை மறைத்தமையால், அம்மறைப்பு நீங்கல் வேண்டி, ஆன்மாக் கருவிகரணங்களோடு கூடுவதாயிற்று'' என்ப தாம்.

இதனால், 'ஆணவம் இருள்போன்றது' என்ப தும், 'கருவி கரணங்கள் விளக்குப் போல்வன' என் பதும் விளங்கும்.

''கருவி கரணங்கள் யாவும் 'மாயை' என்னும் ஒரு முதற்பொருளின் ஆக்கப்பாடு'' என்பது மேலே கூறப்பட்டது. அது பற்றி மெய்கண்டார்,

''மாயா தனு விளக்கா மற்றுள்ளம் காணாதேல்
ஆயாதாம் ஒன்றை'' (நூற்பா 4. அதிகரணம் - 2)

எனக் கூறினார். (தனு - உடம்பு)

மேலும், நான்காம் நூற்பாவில், ''அமைச்சு அரசு ஏய்ப்ப நின்று'' என்றும் கூறினார். அஃதாவது, ''ஆட்சியின் அனைத்துத் துறை நிகழ்ச்சிகளையும் ஒருங்கே அறிய மாட்டாமையால், அவ்வத் துறை அமைச்சரோடு கூடி ஆராயும் அரசன்போல, ஆணவ மல மறைப்பால் அறிவினை இழந்த ஆன்மா அம்மறைப்பு நீங்கல் வேண்டிக் கருவி கரணங்களோடு கூடுவதா யிற்று'' என்பதாம். மனம் முதலிய கருவிகளை நோக்கி அமைச்சரையே உவமையாகக் கூறினாராயினும், ஏனை அரசியல் ஆயத்தார்போலப் பிற கருவிகளும் கொள்ளப் படும்.

தொடர்பு வந்தவாறு

தன்னியல்பை ஆராய்பவனுக்குத் தனக்குக் கருவி கரணங்களின் சேர்க்கைக்குக் காரணம் மேற்கூறிய வாற்றால் விளங்கிற்று. ஆயினும், அச்சேர்க்கை எப்படி உண்டாயிற்று?'' என்று ஓர் வினா எழுகின்றது. அதற்கு விடையாது? என்பதற்கு மெய்கண்டார், இரண்டாம் நூற்பாவில், ''ஆணையின் இருவினையின் போக்கு வரவு புரிய'' என்பதனாற் கூறினார். அஃதாவது உலகத்தில் உயிர்கள் இறப்பதையும், பிறப்பதையும் பார்க்கின்றோம். ''அவை தாமாக நிகழ்வன அல்ல; இறை வன் ஆணைப் படியே நிகழ்கின்றன'' எனக் கூறினார்

பக்தன் எப்படி இருக்க வேண்டும்?

உலகத்தில் ஏதாவது ஒரு நல்ல காரியத்தைச் சாதிக்க வேண்டும் என்ற குறிக்கோள் பக்தனுக்கு வேண்டும். பக்தன் சாதாரண நடப்புகளை நம்பி இருக்கக் கூடாது. செயலின் பலனுக்காகவே முயற்சி செய்யக் கூடாது. தூய்மையானவனாகவும், திறமை உடையவனாகவும் இருக்க வேண்டும். சுபகாரியங்களுக்கும், அசுப காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல், தன் பக்திக் கடமையைச் செயலாற்றும் பக்தன் மிகச் சிறந்தவன் ஆவான்.

- பகவத்கீதை.

ஆகவே, 'கருவி கரணங்களை உயிர்க்குக் கூட்டுவித்தவன் இறைவனே!' என்பது பெறப்பட்டது.

ஆணவமலம் காரணமாகக் கருவியின்றி ஒன்றையும் அறியமாட்டாமையால், ஆன்மா படலம் படர்ந்த கண்ணையுடைய குருடனுக்கு ஒப்பாகின்றது. குருடனுக்குக் கோல் வேண்டும். அதை அவனே தேடி எடுத்துக்கொள்ள முடியாது. கோல் தானாக வந்து அவனை அடையாது. ஆகவே, கண்ணுடைய ஒருவன் கோலை எடுத்துக் கொடுக்கவே, குருடன் கோலைப் பெற முடியும். அது போலத்தான் ஆன்மாவே கருவிகளை எடுத்துக் கொள்ள மாட்டாது. கருவிகளும் தாமாக ஆன்மாவை வந்து அடையா. அதனால், இறைவனே இரண்டையும் ஒருங்கு கூட்டுபவன். கூட்டினவன் பின்பு பிரிக்கவும் பிரிக்கலாம். இதனை, மெய்கண்டார் வழி வந்த உமாபதி தேவர்,

''ஊன் அறியாது என்றும்; உயிர் தான் அறியாது
ஒன்றும்; இவை
தான் அறியாது ஆர் அறிவார் தான்''
(திருவருட் பயன் - 33)

எனக் கூறினார்.

அருள் துணை

இனி, ''இறைவன் உயிர்கட்குக் கருவி காரணங்களைக் கூட்டுவித்து மட்டும் நிற்பவன் அல்லன். உயிர் அக்கருவிகளோடு கூடி அவற்றைப் பயன் படுத்தும் பொழுதும் தோன்றாத் துணையாய் உடன் இருந்து செய்விக்கின்றார்''. என்பது மெய்கண்டாரது முடிவு. அதனை அவர் ஐந்தாம் நூற்பா வார்த்திகத்தில் விளக்குகின்றார்.

ஐந்தாம் நூற்பா - வார்த்திகம்

''இவ் ஆன்மாத்தன்னாலே உணரும் இந்திரியங்களைப் போல''

''இதுவும் தமது முதலாலே உணரும்'' எனக் கூறினார். அஃதாவது, உயிர் கண் முதலிய பொறிகளோடு கூடிநிற்றல் மட்டுமன்று. அவைகளை அவ்வப் புலன்களின் மேல் செலுத்தி அறியும்படியும் செய்கின்றது. அதுபோல் இறைவனும் உயிர்கள் செயற்படும்பொழுது உடன் நின்று அவைகளை அவ்வச் செயலில் செலுத்தி நிற்கின்றான்'' என்பதாம்.

ஆகவே, தன்னை உணர்தலாகிய ஆன்ம ஞானம் உண்டாகும்பொழுதே, தலைவனை உணர்தலாகிய சிவஞானமும் தோன்றுதல் விளங்கும். இது பற்றியே மெய்கண்டார் ''அறிவுடையோர் யாவரும் முதற்கண் தம்மை உணர்தல் வேண்டும்'' எனக் கூறினார்.

இதற்குப் பின் மற்றொன்று

''தன்னை உணர்வதாகிய ஆன்மாத்தானே, தலைவனை உணர்தலாகிய சிவஞானமும், தான் எய்தி நிற்கும், உலகத்தை உணர்தலாகிய உலக ஞானமும் உளவாகும்'' எனக் கூறினோம். அதனால், 'உலகம், உயிர், இறைவன்' என மூன்று பொருள்கள் பெறப் பட்டன. ''அவற்றுள் 'உலகமும், இறைவனும்' என்னும் இரண்டும் ஒன்றை ஒன்று அறிதலும், அறிந்து பயன் பெறுதலும் இல்லை. இடைநிற்பதாகிய உயிரே ஏனை இரண்டினையும் அறிந்து பயன்பெறுவது''. என்பதையும் தன்னைப் பற்றி உணருமிடத்து அறிதல் வேண்டும். இதனை மெய்கண்டார்.

''யாவையும் சூனியம் சத்தெதிர் ஆகலின்
சத்தே அறியாது; அசத்துஇலது அறியாது;
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா''

எனக் கூறினார். (சிவஞான போதம் - 7ஆம் நூற்பா)

சத்து - மெய்ப் பொருள் - நிலையுடைய பொருள் : இறைவன்.

அசத்து - பொய்ப் பொருள் - நிலையாப் பொருள்; உலகம். இந்நூற்பாவின் பொருளை

''நன்றா உரைக்கக் கேள்; நல்லசித்தின் முன்
அசித்து இங்கு
ஒன்றாது; சித்து அசித்தை ஓராது;- நின்று இவற்றை
அன்றே பகுத்தறிவது ஆன்மாவாம் என்று மறை
குன்றாமல் ஓதும் குறித்து''

என உணர்த்தியிருக்கவும் காணுகின்றோம்.

சித்தர் தரிசனம்....!!

- எம். ஜெகதீசன், எம்.ஏ.

அன்று சனிக்கிழமை...

காலையில் எழுந்தவுடன் 'கோரக்கச் சித்தர்' நினைவிடத்திற்கு செல்லவேண்டுமே என்ற நினைவும் கூடவே எழுந்தது. முன்நாள் இரவு வழக்கறிஞர் கார்த்திகேயனிடம் வண்டி கொண்டுவரச் சொல்லியதும் நினைவு வந்தது. அவசரஅவசரமாக எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு, குளித்துவிட்டு தயாரானேன். வழக்கறிஞர் கார்த்திகேயனும் சரியாக 8 மணிக்கு வந்து சேர்ந்தார்.

இரவெல்லாம் பெய்த மழை இன்னும் விட்ட பாடில்லை. சிறுசிறு தூறல்கள் விழுந்து கொண்டிருந்தன. இருந்தாலும், மனம் உற்சாகத்தில் இருந்தது. நாகப் பட்டினம் நகரத்திலிருந்து பொய்கைநல்லூர் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. 2 கி.மீ. தூரமும் கடற்கரையோரப் பயணம். 'கோரக்கச் சித்தரின்' ஜீவ சமாதியைக்காண செல்கின்றோம் என்ற ஆவலும், உந்துதலும் மனதிற் குள்ளே இருந்தது. குழந்தைப்பருவம் முதலே நாகை நகர் அறிமுகம் என்றாலும் கோரக்கச் சித்தர் ஜீவ சமாதியைப் படித்த ஞாபகம் மட்டுமே உண்டு. கோரக்கச் சித்தர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், நாகையை அடுத்த பொய்கை நல்லூரில் ஜீவ சமாதி அடைந்துள்ளார். அவர் ஜீவசமாதி அடைந்துள்ள இடத்தில் ஒரு பெரிய சத்திரம் கட்டப் பட்டிருக்கிறது. அதனுள்ளே ஒரு மேடைமீது இரண்டு பாதங்கள் மட்டும் வைக்கப்பட்டு ஜீவசமாதி எழுப்பப் பட்டுள்ளது. அந்த இரு பாதங்களுக்கும் அபிஷேகம் - பூஜைகள் முறையாகச் செய்யப்பட்டு வருகின்றன.

நாங்கள் ஜீவசமாதியை அடைந்தபோது அபி ஷேகம் நடந்துகொண்டிருந்தது. அபிஷேகம் முடிந்து சர்க்கரைப் பொங்கல் உணவு படைக்கப்பட்டுத் தீபா ராதனை காண வரும் எல்லோருக்கும் சுடச்சுடச் சர்க்கரைப் பொங்கல் வழங்கினார்கள். மனதிலும் ஒரு நிறைவு ஏற்பட்டது.

பின்னர் அங்கிருந்து நாகை திரும்பிப் பேருந்து நிலையத்தில் திருநள்ளாறு செல்கின்ற பேருந்தைப் பிடித்து திருநள்ளாறு வந்தடைந்தேன். திருநள்ளாறு தலத்தில் 'தர்பஆரண்யேஸ்வரரைத்' தரிசனம் செய்து விட்டு நள்ளாற்று சனீஸ்வரரையும் தரிசனம் செய்து விட்டு வெளியே வந்தேன். கோவிலை விட்டு வெளியில் வந்தவுடன் கோவிலுக்குச் செல்வதற்கு முன் பிரம்ம தீர்த்தத் திருக்குளத்தில் கால் நனைக்காமல் சென்று விட்டது நினைவுக்கு வந்தது. பரவாயில்லை என்று கருதிக் குளத்துப் படிக்கட்டில் பெட்டியை வைத்துவிட்டு குளத்துநீரில் முதல்படியில் இறங்கிநின்றேன். அப் போது, ''ஐயா குளத்தில் காசு போட்டுவிட்டுதான் கை, கால் கழுவவேண்டும் அல்லது குளிக்கவேண்டும்'' என்று ஒரு சிறுவன் கூறினான். நான் சிறிதே தயங்கி யோசனை செய்தேன். அப்போது, ''ஆமாம் காசு போடுங்கள்'', என்று ஒரு குரல் பேசியது. குரல் வந்த திசையை நோக்கினேன். குளக்கரையில் இடுப்பில் வேட்டியை மட்டும் அணிந்து கொண்டு கழுத்தில் ஒரு துண்டு போட்டுக் கொண்டு நரைத்த தலையுடன் ஒரு கருத்த மனிதர் நின்றுகொண்டிருந்தார். 'காசு போடுங் கய்யா..... என்று மீண்டும் கூறினார். நான் ஒரு ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அந்தச்சிறுவன் கூறியபடியே தலை யைச் சுற்றிவிட்டுக் குளத்துநீரில் அந்த ரூபாயை போட்டு விட்டுப் பின்னர் கை, கால் கழுவிக்கொண்டு கரை யேறினேன். கரையிலேயே அந்த பெரியவர் அப்போதும் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் சென்று எனக்குள் மனத்தில் தோன்றியவாறு ஒரு பத்துரூபாய் தாளை நீட்டி ''சாப்பிட வைத்துக்கொள்ளலாம்'' என்று கூறி கொடுத் தேன். அவர் சிரித்துக்கொண்டே வாங்க மறுத்துவிட்டார். நான் பெட்டியை எடுத்துக்கொண்டு பேருந்து நிலை யத்தை நோக்கி நடந்துசென்று மாயவரம் பேருந்திற்காகக் காத்திருந்தேன். மாயவரம் பஸ் வந்தது. அதில் ஏறி அமர்ந்தபடியே கையில் வைத்திருந்த 'குறை ஒன்றும் இல்லை கோவிந்தா' என்ற நூலினுள் ஆழ்ந்துபோனேன்.

பஸ் மாயவரம் பேருந்து நிலையத்தை அடைந்தது. அது புதிய பேருந்துநிலையம். பழைய பேருந்து நிலையத்தை அடைவதற்கு ஒரு சிறிய சந்து வழியாகச் செல்லவேண்டும் என்று கூறினார்கள். அந்தச் சிறு சந்தின் இருமருங்கிலும் பழக்கடைகள் இருந்தன. காய்கறிக் கடைகளும் தெருவில் போட்டிருந்தார்கள். பெட்டியை கையில் எடுத்துக்கொண்டு அதன்வழி நடந்தேன். மணி மதியம் 1 ஆகி இருந்தது. சாப்பிட்டு விட்டுச்செல்லலாம் என்று நினைத்தேன். அப்போது தான் எனக்கு ஒரு ஆச்சர்யம் காத்திருந்தது. அந்த சந்தின் மறுமுனையில் நான் திருநள்ளாற்று குளக்கரையில் சந்தித்த அந்தப் பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

எனக்குள் சிறிது ஆச்சர்யம். நமக்கு முன்னர் இவர் எப்படி வரமுடிந்தது என்று? வேறு ஏதேனும் வழித் தடங்களில் வந்திருப்பார் என்று எனக்குள் சமாதானம் கூறிக்கொண்டு அவரைக் கடந்து செல்ல முயற்சித்தேன். அப்போதுதான் அவர், ''நீ மட்டும் சாப்பிட்டால் போதுமா?'' என்று என்னை நோக்கிக்கேட்டார். நான் அப்படியே பெட்டியைக்கீழே வைத்துவிட்டு நின்று விட்டேன். உடனே சமாளித்துவிட்டு, ''ஐயா உங்களுக்கு சாப்பாட்டுக்கு தான் திருநள்ளாற்றிலே ரூபாய் கொடுத்

தேன். நீங்கள் வேண்டாம் என்று சொல்லவிட்டீர்கள்; வாருங்கள் சாப்பிடப் போவோம்'' என்று அவரையும் அழைத்தேன். அவரும் உடன் வந்தார். களியக்குடி ஓட்டலில் இருவரும் சாப்பிட்டோம்.

பின்னர் பேருந்துநிலையம் நோக்கி நடந்து வந்தேன். நான் பெரியவரிடம் விடைபெறும் முன் ஒரு 50 ரூபாய் பணத்தைக் கொடுத்து வழிச் செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினேன். அவர் அப்போதும் வாங்க மறுத்துவிட்டார். பிறகு அவர், என்னிடம், எங்குச் செல்கிறீர்கள்? என்று கேட்டார். ஐயா, நான் சீர்காழி அல்லது வைத்தீஸ்வரன் கோவில் சென்று சாமி தரிசனம் செய்துவிட்டு பின்னர் சென்னை செல்லலாம் என்று இருக்கிறேன். அதுதான் எனது திட்டம் என்றேன். அதற்கு அவர் ''அந்தக் கோவில்களில் நடைசாத்தியிருக்கும். நீ போனால் தரிசனம் செய்ய இயலாது''. நேரே புறப்பட்டுச் செல், என்று கூறினார். சரி என்று விடை பெற்றுக் கொண்டு நான் புறப்பட்டேன்.

சிறிதுதூரம் சென்றவுடன் ஒரு வெற்றிலைப் பாக்குக்கடையில் நின்று, வெற்றிலைப்பாக்கு வாங்கிப் போட்டுக் கொண்டிருந்தேன். அப்பொழுது அந்த பெரியவர் பின்னாலே வந்து எனக்கும் வெற்றிலை கொடு என்று என்னிடம் வாங்கி வெற்றிலையைப் போட்டுக்கொண்டார். பின்னர் அவரிடம் விடைபெற்று நான் பேருந்து நிலையம் வந்தேன். சிதம்பரம் செல்லும் பேருந்து தயாராக இருந்தது. அதில் ஏறி அமர்ந்து சிதம்பரம் வந்தேன். சிதம்பரத்தில் கடலூர் பஸ் நின்றிருந்தது. உடனே அந்த பேருந்தைப் பிடித்து கடலூர் வந்தேன். அங்கு பாண்டிச்சேரி செல்லும் பஸ் நின்றிருந்தது. பாண்டிச்சேரி பஸ் பிடித்து பாண்டிச்சேரி வந்து சேர்ந்தேன். அப்போது மாலை மணி 5. .

காபி சாப்பிடுவோம் என்று பேருந்து நிலையத்தில் அருகிலுள்ள கடைக்குச் சென்று காபி, டிபன் சாப்பிட்டுவிட்டு வெளியில் வந்தேன். அப்பொழுதுதான் கவனித்தேன். பையில் வைத்திருந்த ஒரு நூறு ரூபாயை காணவில்லை என்பதை. எங்கே விழுந்தது என்று தெரியவில்லை. மனம் சற்று சங்கடப்பட்டது. மீண்டும் பாண்டிச்சேரி பேருந்து நிலையத்தில் நுழைந்தவுடன் சென்னை செல்லும் பேருந்து நிற்கும் இடம் நோக்கி விரைந்தேன்.

அங்குதான் எனக்கொரு ஆச்சர்யம் காத்திருந்தது. நான் காலையில் திருநள்ளாறிலும், மதியம் மாயவரத்திலும் சந்தித்த அதே பெரியவர் அங்கு நின்றுகொண்டிருந்தார். என்னைக் கண்டதும்'' என்ன காணாமல் போய்விட் டதே என்று கவலையாக இருக்கிறதா?'' என்று கேட்டார். நான் ஆச்சர்யத்தால் வியந்து போனேன். நாம் பணத்தை தவறவிட்டது இவருக்கு எப்படி தெரியும் என்று நினைத்துக் கொண்டு எப்படி இவ்வளவு விரைவில் நமக்கு முன்னால் இவர் வரமுடியும் என்ற எண்ணங்களும் என்னைச் சூழ்ந்து கொண்டது. பேருந்து நிலையம் என்று கூட பாராமல் எனக்குள் ஏற்பட்ட ஒரு மனஉந்தலில், பெட்டியை கீழே வைத்துவிட்டு அந்த பெரியவரை சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினேன். எங்களைச் சுத்தி ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது. அப்போது அந்தப் பெரியவர், 'இவர் நமக்கு வேண்டிய வருங்க - நீங்க எல்லாம் போங்க' என்று கூடியவர்களைப் போகச் சொன்னார். நான் அந்தப்பெரியவரிடம் தயங்கி, தயங்கி, ''ஐயா நீங்கள் யார்?'' என்று கேட்டேன். அவர் மௌனமாக இருந்தார். நான் மீண்டும் எனது கேள்வியைத் தொடர்ந்தேன். அப்போது அவர், ''உனக்காக சென்னை பஸ் நிற்கிறது, போய் ஏறிக்கொள்'' என்று கட்டளையாகச் சொன்னார். நான் தயங்கியபடி நின்றேன். மீண்டும், போ... போ.... ஏறிக்கொள் சீக்கிரம்... என்று என்னை விரைவுபடுத்தினார். நான் செய்வதறியாது பஸ்ஸில் சென்று ஏறி உட்கார்ந்தேன்.

எனக்குள் பல எண்ணங்கள் - குழப்பங்கள். நாம் சந்தித்த அந்தப் பெரியவர் யார்? காலையில் தான் கோரக்கச் சித்தர் சமாதிக்கு சென்று வந்தேன். அதனுடைய விளைவா? அல்லது வேறு என்ன - யார் அவர்? நமக்கு முன்னர் ஒவ்வொரு இடத்திற்கும் அவரால் எப்படி வரமுடிந்தது? நாம் பணத்தைத் தவறவிட்டது இவருக்கு எவ்வாறு தெரிய வந்தது என்று பல கேள்விகள் மனதிலே எழுந்தது. அயர்ந்து அப்படியே உறங்கிப் போனேன்.

பஸ் சைதாப்பேட்டையை நெருங்கியது. சைதாப்பேட்டை பஸ் நிலையத்தில் பேருந்து நிறுத்தும் இடத்தில் பஸ் நின்றவுடன் இறங்கினேன். சுற்றும்முற்றும் பார்த்தேன். ஒரு ஆட்டோ அருகில் வந்தது. நான் செல்லும் இடத்தைக் கூறி, வருகிறாயா? என்று கேட்டவுடன், வருகிறேன் என்று சொன்னான். பெட்டியை ஆட்டோ உள்ளே வைத்துவிட்டு நானும் ஏற எத்தனித்தேன். அந்த நேரத்தில், சார்... சார் என்று யாரோ கூப்பிடுவது காதில் விழுந்தது. திரும்பி பார்த்தேன். நல்ல உடை அணிந்த ஒருவர் ''சார்'' ரூபாயை கீழே போட்டுவிட்டு போகிறீர்கள் ''என்று என்னிடம் 100 ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.'' இல்லிங்களே, நான் போடவில்லையே என்று வாங்க மறுத்தேன். ''இல்லை உங்க பாக்கெட்டிலிருந்துதான் விழுந்தது'' என்று கூறி என் கையில் அந்த 100 ரூபாய் நோட்டை வைத்துவிட்டு அப்போதுதான் வந்து நின்ற பஸ்ஸில் அவர் ஏறிக்கொண்டார். நான் திகைத்துப் போய் நின்றேன். நாம் பாண்டிச்சேரியில் தொலைத்து விட்ட அந்த பணம் இங்குக் கிடைத்திருக்கிறதா... இதற்கும் நாம் சந்தித்த பெரியவருக்கும் தொடர்பு உண்டா என்ற கேள்விகள் என் அறிவார்ந்த மனதில் எழுந்தது. ஆட்டோவில் ஏறி வீட்டிற்கு வந்தேன். கை, கால் கழுவிக் கொண்டு மனைவியை விளக்கேற்றச் சொல்லி அந்த விளக்கின் முன் விழுந்து நமஸ்கரித்தேன்.

எனக்குள் ஆயிரம் கேள்விகள்.... விடை தெரியவில்லை... யார் அந்த பெரியவர்?

(இது ஒரு உண்மை நிகழ்வு,
அதனை அப்படியே தந்துள்ளேன்)

கம்பரின் இராமாவதாரம்

– கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

2. அயோத்தியா காண்டம்

3. பின்னவன் பெற்ற செல்வமும் அடியேன் பெற்றதே!

இராமபிரானுக்கு முடிசூட்டுவது என மந்திரா லோசனை சபையில் தீர்மானம் செய்யப்பட்டபின் தசரதர், இச்செய்தியை அறிந்தால் பெற்ற தாயான கௌசலையைக் காட்டிலும், வளர்த்தபாசம் உடைய கைகேயி அதிக மகிழ்ச்சியடைவாள் என எண்ணிக் கைகேயியின் அரண்மனைக்கு வந்தார். அரண்மனைக் குள் கைகேயியைத் தேடிக்காணாது, ஒருபுறத்தில் அலங் கோலமாக விழுந்துகிடந்த அவளைக்கண்டு திடுக்கிட்டு அவளை வாரியெடுக்க, கைகேயிஅரசனின் கையைத் தள்ளிவிட்டுத் தரையில் விழுந்து பெருமூச்சுவிடுகிறாள். ''தேவி! என்ன நடந்தது? ஏழுஉலகிலுள்ள எவராயினும் உன்னை வேதனைப்படுத்தியவரை கொன்றுவிடுவேன்! சொல்! சொன்னபின் என்ன நடக்கிறது பார்'' என்றார்.'' ''மகராஜா! உங்களுக்கு என்மீது அன்பிருந்தால் அக்காலத் தில் எனக்கு அளிக்கிறேன் எனக் கூறிய இரண்டு வரங்களையும் இப்போது அளிக்கவேண்டும்'' என்றாள். கைகேயி ''இவ்வளவுதானே! நீ எதுகேட்டாலும், தயங்கா மல் அளிபேன்''

''உள்ளமுவந்து உளசெய்வேன் ஒன்றும் லோபேன்
வள்ளல் இராமன் உன்மைந்தன் ஆணை என்றான்.''

''உன் மகன் இராமன் மீது ஆணையாக நீ எதைக் கேட் டாலும் கொடுப்பேன்'' என்று தன்னையறியாமல் வாக் களித்தார் தசரதர்.

''ஏய வரங்கள் இரண்டினில் ஒன்றால் என்
சேய் அரசாள்வது! சீதை கேள்வனோ ஒன்றால்
போய்வனமாள்வது எனப்புகன் றுநின்றாள்''

''உன் மகன் இராமன் மீது ஆணை'' எனக்கூறிய தசரத ரிடம் ''என்சேய்'' எனப்பரதனைக் குறிப்பிட்டு ''சீதை கேள்வன்'' என ''இராமன் தனக்கு அன்னியனே'' என்றாள் கைகேயி. ''என் மகன் நாடாள, சீதைநாயகன் காடாளச் செல்லட்டும்'' எனக்கூறிய கைகேயின் பெய ரையும் சொல்லக்கூசிய கம்பர் ''தீயவையாவினும் சிறந்த தீயாள்'' எனக்குறிப்பிடுகிறார்.

பால் வார்த்தவரையே கடிக்கும் பாம்பினைப் போல் கைகேயி தன் கணவனுக்கே துரோகம் செய்து விட்டாள். கைகேயி வரம்கேட்டவுடன் தசரதன் வேரற்ற மரம்போல் வீழ்ந்துவிட்டான். புரண்டுபுரண்டு அலறும் அவ்வரசனின் சோகத்தை எப்படிக்கூறுவது? நாவு உலர்ந் தது. உயிர்நீங்கிவிடும் போலாயிற்று. கண்கள் கண்ணீரை மட்டுமல்ல. புண்ணீரையும் கக்கின! துயரமும் சினமும் சேர்ந்துகொண்டன. தரையில் உட்கார்ந்தார்! எழுந்தார்! நின்றார்! திடீரென விழுந்தார். எழுதுசித்திரம்போல் அசையாதிருந்தார். ''கைகேயியைக் கொன்றுவிடலாமா? என எண்ணிப் பல்லைக்கடித்தார். 'பாவி! நீதானாக வரங் கேட்டாயா? எவராவது இப்படிக்கேட்குமாறு போதனை செய்தாரா? என்றார். அவளோ'' எனக்கு எவரும் எந்த போதனையும் செய்யவில்லை! மகராஜா! எனக்கு இவ் வரங்களைத் தராவிடில் உங்கள் மீது பழிவருமாறு என் னையே அழித்துக்கொள்ளுவேன்'' என்றாள்.

வீராதிவீரராகிய தசரதர் ''ஐயோ! கொடியவளே! வாய்மையின் பெயரால் என்னைத் துரோகம் செய்து விட்டாயே! எனக்குச்சாவு நேராதா? என்று தள்ளாடி னான்.

ஆ! கொடியாய் எனும்: ஆவிகாலும் அந்தோ!
ஓ! கொடிதே அறம் என்னும்

''உலகில் பெண்களே இல்லாமல் எல்லோரையும் ஒழித்துவிடுகிறேன்'' என வெறிகொண்டு கதறினார் தசரதர்.

நாரியரில்லை இஞ்ஞாலம் ஏழும் என்னக்
கூரியவாள் கொடு கொன்று நீக்கியானும்
பூரியர் எண்ணிடை வீழ்வன் என்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்

(பூரியர் = கீழ்மக்கள்)

கையொடு கைபுடைத்து கதறிய அரசர் ஒருவாறு மனந் தேறி கைகேயிடம் ''கைகேயி! உன்மகன் பரதன் இவ் வரசை ஏற்கவே மாட்டான். அவன் ஏற்றுக்கொண்டாலும் உலகம் அச்செய்கையை ஒப்பாது. உலகம் புகழுமாறு வாழவேண்டிய நீ எதற்காகத் தவறான காரியம் செய்து பழிகாரி எனப்பட்டம் பெறவேண்டும்.''

கொள்ளான் நின்சேய் இவ்வரசு, அன்னான்
கொண்டாலும்
நள்ளாதிந்த நானிலம்: ஞாலம் தனில் என்றும்

உள்ளாரெல்லாம் ஓத உவக்கும் புகழ்கொண்டாய்!
எள்ளா நிற்கும் வன்பழிகொண்டு என் பயன் என்றான்.

''இராமன் காடு சென்றால் அதைத்தாங்கமுடியாது யாவருமே இறந்துவிடுவார்கள். அதன்பின் நீ யாருடன் யாரை அரசாட்சி செய்வாய்! வேண்டுமானால் இராமனிடம் கூறி பரதனுக்கு அரசையளிக்கச் சொல்லுகிறேன். கைகேயி! என் கண்வேண்டுமென்றாலும் கொடுப்பேன்! என் உயிர் வேண்டுமென்றாலும் அது உன்னுடையதுதானே! அரசை பரதனுக்கு அளித்துவிடலாம்? இன்னொரு வரங் கேட்டாயே! அது வேண்டாமென்று! நீயே கூறிவிடு''

கண்ணே வேண்டும் என்னினும் ஈயக்கடவேன்: என்
உண்ணேராவி வேண்டினும் இன்றே உனதன்றோ!
பெண்ணே! வண்மைக்கேகயன்மானே! பெறுவாயேல்
மண்ணே கொள்நீ! மற்றையதொன்று மற என்றான்.

''கொடையாளியான கேகயன் மகளே!'' என அவள் குலத்தவர் கேட்டதைக் கொடுப்பார் எனப்புகழ்ந்ததுடன் மற்றையதொன்று - இராமன் காடு செல்லும் வரம் என்பதைக் கூறக்கூசி, ''அவ்வரத்தை மறந்துவிடு'' என்று கெஞ்சினார் தசரதர். ''மகாராஜா! கொடுத்த வரத்தை வேண்டாமென்று கூறச்சொல்கிறீர்களே! இது நேர்மையா? ''என்றாள் கைகேயி.

அதுகேட்ட அரசன்'' ஐயோ! மங்கையர்பலர் கணவனுக்கு முன்னாலோ அல்லது கணவனுடனேயோ உயிர்விட்டு புண்ணியஉலகமும் புகழுடம்பும் பெற்றனர். இதுவரை கணவனை எவரும் கொன்றதில்லை. கொடியவளே! நீ கொல்லப்போகிறாய்! குலத்தின் பெருமையையும் பழக்கவழக்கங்களையும் மறந்துவிட்டாய்; இரக்கமில்லாதவளாகிவிட்டாய்! உன் நாவினால் என்னைக் கொன்றுவிட்டாய்! உலகத்திலுள்ள, ஏன் தேவர்களையும் கூடவென்ற எனக்குக் கொண்ட மனைவியால் மரணமா?'' என அலறினார். கைகேயி மீண்டும் ''மன்னவா! வரங்களைக் கொடுக்காவிட்டால் இன்றே என்னை அழித்துக் கொண்டு உங்களுக்குப்பழி ஏற்படும்படி செய்வேன்'' என்றாள். அது கேட்டமன்னவன்

''ஈந்தேன் ஈந்தேன் இவ்வரம் என்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானுலகாள்வேன்
வசை வெள்ளம்
நீந்தாய்! நீந்தாய் நின்மகனோடு நெடிதென்றாள்.

''பாவி! நாடு தன்னுடையதாக அரசனாகவேண்டிய நல்லதினத்தில் இராமன் காடு செல்ல வரங்கொடுத்து விட்டேன்! கொடுத்துவிட்டேன். ஆனால் இராமன் காடு செல்லுமுன் நான் உலகத்தைவிட்டே போய்விடுவேன்! கொண்ட கணவனுக்கும் அன்புருவான் மகனுக்கும் துரோகமிழைத்தவள் என உலகம் இகழ, நீயும் உன் மகனான பரதனும் பழியாகிய கடலில் நீந்துங்கள்'' என அலறி வீழ்ந்து மூர்ச்சையாகிவிட்டார் தசரதர்.

கைகேயி கணவன் மூர்ச்சையானது கண்டு கலங்கவில்லை. அவரைத் தேற்றவில்லை. அவரைத்தாங்கி ஆறுதல் கூறவில்லை. ''யார் எப்படிப்போனால் என்ன? எனக்கு வேண்டியது கிடைத்துவிட்டது'' என அங்கேயே படுத்து நிம்மதியாக உறங்கினாள் இரக்கமற்ற கைகேயி. ''ஊறா நின்ற சிந்தையினாளும் துயில்வுற்றாள்'' என்றார் கம்பர்.

★ ★ ★

தன்னை மனைவியாக ஏற்ற அன்றுமுதல் இதுவரை, தசரதரின் இன்ப துன்பங்களில் பங்குகொண்ட கைகேயி, தன்னால் புண்படுத்தப்பட்டு மூர்ச்சையடைந்த கணவனுக்கு எந்த ஆறுதலும் அளிக்காது சுகமாகத் தூங்குவது கண்டு'' கைகேயின் இரக்கமற்ற தன்மையைக் கண்டு பெண்களே இரக்கமற்றவர்கள் என உலகம்பேசும். ஆதலால் ஆடவர்கள் எதிரிலே பெண்கள் வரமுடியாது. எனவே நான் ஓடிவிடுகிறேன் என இருட்டு என்னும் பெண் ஓடினாள்'' என பொழுதுவிடிவதைக் கவிஞன் கதைப்போக்கில் சம்பந்தப்படுத்திப் பாடுகிறான்.

சேணுலாவிய நாளெலாம் உயிர் ஒன்றுபோல்வன
செய்துபின்
ஏணுலாவிய தோளினால் இடர்எய்த ஒன்றும்
இரங்கிலா
வாணிலா நகை மாதராள் செயல் கண்டு
மைந்தர்முன் நிற்கவும்
நாணினாள் என ஏகினாள்
நளிர் கங்குலாகிய நங்கையே.

பொழுது விடிகிறது. கைகேயியின் துரோகத்தை எண்ணி கோபமடைந்து முகம் சிவந்த மாதிரி சூரியன் தோன்றினான். பட்டாபிஷேகம் காண மகிழ்ச்சியுடன் வரும் பெண்களின் முகங்கள் போல் தாமரைகள் மலர்ந்தன.

இராமனுக்கு முடிசூட்டு விழா என எண்ணி அனைவரும் மகிழ, வசிட்டர் அரண்மனைக்கு வந்து மங்களகரமான தீயை உண்டாக்கி, நீராட்டுவதற்கு புனித நீர்க்குடங்களையும் சிம்மாதனத்தையும் சித்தப்படுத்தினார். சோதிடர்கள் காலம் வந்தடுத்தது (முகூர்த்தத்திற்கு நேரமாகிவிட்டது என்பது காலம் வந்துஅடுத்தது என்று தவறான சொல்லாக வந்துவிட்டது) என்றனர். வசிட்டரின் கட்டளைப்படி தசரதரை அழைக்க, சுமந்திரன் கைகேயியின் அரண்மனையை அடைய, கைகேயி 'இராமபிரானை இங்கு அழைத்து வருக'' எனக் கட்டளையிட்டாள் பெண்களில் யமனுக்கு நிகரான (பெண்டிரில் கூற்றமன்னாள்) கைகேயி.

வளர்த்த வாஞ்சை! தன்கையால் முடிசூட்டக் கைகேயி இராமபிரானை அழைக்கிறாள் என எண்ணிய

ஸ்ரீ ஐஸ்வரிய புஷ்ப - கனி - கலசதீப அலங்காரக்கலை

ஐந்து வகைப்பூக்கள், ஐந்துவகைப் பழங்களின் படம் வரைந்து திருக்கோயில்களின் கருப்பக்கிரகம், அலங்காரமண்டபம், வசந்த மண்டபம் போன்றவற்றை அலங்கரிக்கும் தொன்மையான கலைக்கு ஸ்ரீ ஐஸ்வரிய புஷ்ப-கனி-கலசதீபம் அலங்காரக் கலை என்பது பெயராகும். இக்கலை வடிப்பதில் வல்லவராக காஞ்சி திரு. குணாசீதாராம் அவர்கள் கடந்த 30 ஆண்டுக்காலமாகச் சிறப்புறப் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரிய சுவாமிகள், அமரர் டாக்டர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் போன்றோரின் பாராட்டுதல்களைப் பெற்றுள்ள இவருடைய ஸ்ரீ ஐஸ்வர்ய புஷ்ப-கனி-கலசதீப அலங்காரப் பணி போற்றுதலுக்குரியது.

சுமந்திரன் இராமபிரானை ''அனைவரும் உமக்கு முடி சூட்டுவிழா என மகிழ்ச்சியுடன் இருக்க, சிற்றன்னையான கைகேயி அங்கு வருமாறு அழைத்தாள்'' என்றார். திருமுடி சூட இராமபிரான் வருகிறார் என எண்ணிய நாட்டுமக்கள் ''பெருமானே! நீ உலகம் உள்ள அளவும் வாழ்க!, எங்கள் ஆயுள் பூராவும் உனக்கே ஆகட்டும் - நாங்கள் செய்த புண்ணியம் அனைத்தும் உன்னைக் காப்பாற்றட்டும்'' என்றெல்லாம் வாழ்த்தினர். சிலர் மட்டும் தங்களையறியாமல் கண்ணீர் விட்டனர். தாவிவரும் கன்றைக் கண்ட தாய்ப்பசு மாதிரி மக்கள் மகிழ்ச்சி கொண்டனர். இதை விவரிக்கும் பாடலைப் பாடிப் பாருங்கள்!.

மின்பொருவு தேரின் மீசை வீரன் வரு போழ்தில்
தன்பொருவில் கன்று தனி தாவிவரக் கண்டாங்கு
அன்புருகு சிந்தையொடு ஆவுருகுமா போல்
என்புருகி நெஞ்சுருகி நஞ்சுருகி நிற்பார்.

''ஆகா! கைகேயி வளர்த்த இராமன்''. அந்த அம்மை எவ்வளவு மகிழ்ச்சியடைவாள்'' என மக்கள் பேசுகின்றனர். இராம பிரான் கைகேயியின் அரண் மனையை அடைந்த போது, எதிரில் வந்த கைகேயி ''இவனைக் காட்டிற்குப் போகுமாறு அரசர் கூறமாட்டார். நானே சொல்லுகிறேன்'' என எண்ணி, தன்னைத் தாயாக எண்ணி வணங்கி வந்த இராமபிரான் எதிரில் யமன் போல் வந்தாள் கைகேயி. தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள். அவ்வாறு வந்த இராமபிரானைக் கண்ட கைகேயி'' உன் தந்தை உனக்கு ஏதோ கூற வேணுமென்று என்னிடம் கூறினார்'' என்றாள். இராமபிரான் ''என் தந்தையின் கட்டளை. அதுவும் உங்கள் மூலம் கிடைக்குமானால் வேறு பேறுண்டோ! தாங்களே கூறலாமே! என்றார். இரக்க மற்ற கைகேயி

ஆழிசூழ் உலகமெல்லாம் பரதனே ஆள: நீ போய்த்
தாழிரும் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு
பூழிவெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறை களாடி
ஏழிரண்டாண்டின் வாவென்று இயம்பினன்
அரசனென்றாள்

''பரதன் நாடாள, நீ சடாமகுட தாரியாக காடு சென்று புனித நீர்களில் ஆடி, பதினான்கு ஆண்டுகளில் திரும்பி வருக என்பதைக் கேட்ட இராமபிரானின் திருமுகம் - எப்பொழுதும் புதியதாகப் பூத்ததாமரை மாதிரியான இராமபிரானின் முகம் அதையும் மீறிய அழகுடன் விளங்கியது. தந்தையின் சொல்லை மீற முடியாது அரச பாரத்தை ஏற்கத் துணிந்த இராமபிரான், தாங்கமுடியாத பாரத்தை வண்டியுடன் இழுத்துச் செல்லும் ஒரு காளையை ஒருவன் வண்டியிலிருந்து அவிழ்த்துக் கட்டினால் பாரம் நீங்கிய காளை எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்குமோ! அவ்வளவு மகிழ்ச்சியடைந்தார் இராமபிரான். ''அம்மணி! அரசர் கட்டளையிடாவிட்டாலும் நீங்கள் கட்டளையிட்டால் நான் மீறுவேனோ? என்தம்பிக்குக் கிடைத்த அரசு எனக்குக் கிடைத்தமாதிரி தானே! இன்றே காடு போகிறேன். விடைதந்தருள்க'' என்றார்.

மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ! என்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ!
என் இனி உறுதியிப்பால் இப்பணிதலை மேற்
கொண்டேன்!
மின்னொளிர் கானம் இன்றே போகின்றேன் விடையும்
கொண்டேன்.

இப்பாடலை உற்று நோக்கினால் ''இது அரசன் கட்டளையன்று. உன் கட்டளைதான்; இதை மீறுவேனா. மன்னவன் பணியன்று ஆகில் உன் பணி மறுப்பனோ என்று உண்மையைக் கூறுவது போலுள்ளது'' என் தம்பி பெற்ற செல்வம் அடியேன் பெற்றதுதான். ''அவனும் என் மாதிரி ஊருக்கு வெளியே சடாமகுடத்துடன் வசிப்பான்'' என் பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ! என்று தம்பியின் பெருமையைக் கூறுவது போல் தொனிப் பொருள் கிடைக்கின்றது. தியாக மூர்த்தியான இராமபிரான் தன் அன்னை கோசலையின் அரண்மனை நோக்கிச் சென்றார்.

(தொடரும்)

எம்பார்

- திருமதி கோமதி ராகவன்

''நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவ வேடம் தலை நின்றான்''
(கம்பராமாயணம் - குகப்படலம் 30)

எம்பெருமானார் போன்றே ஒத்த தோற்றம் கொண்டவர் அவரது திருத்தம்பியான எம்பார். இவர் இளம் வயதிலேயே இல்லறம் நீத்துத் துறவறம் ஏற்று எம்பெருமானாரது சிஷ்யரானார். ஓராண்வழி குருபரம்பரையில் எம்பார் உடையவருக்கு அடுத்தபடி ஆசார்ய பதம் வகிப்பவர்.

திருமலை திருப்பதியில் ஆளவந்தாரின் சிஷ்யரான திருமலைநம்பிகள் திருவேங்கமுடையானுக்குக் கைங்கர்யம் செய்து வந்தார். இவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தனர். திருமலை நம்பிகள் அந்த சகோதரிகளில் மூத்தவளான காந்திமதியை பெரும்பண்டிதரான ஸ்ரீபெரும்புதூர் ஆசூரி சோமாயாஜியாண்டான் என்பவருக்கும், இளைய சகோதரி ஸ்ரீதேவியை அகரம் கமல நயன பட்டர் என்ற வைணவச்சான்றோருக்கும் திருமணம் செய்துவைத்தார்.

ஆசூரி சோமாயாஜியாண்டான்''வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ'' திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசராதி பெருமாள் சந்நிதியில் வேள்விகளை இயற்றினார். யாகத்தின் பலனாக அவருக்குப் பிங்கள வருடம் (கி.பி.1017) சித்திரை மாதம் செய்ய திருவாதிரை திருநட்சத்திரத்தில் ஸ்ரீராமானுஜர் திருக்குமாரராய் அவதரித்தார். எம்பெருமானார் அவதரித்த எட்டு வருடங்கள் கழித்துக் குரோதன வருடம் தைமாதம் புனர்பூசம் நட்சத்திரத்தில் கமலநயனபட்டருக்குத் திருக்குமரராய் அவதரித்தவர் கோவிந்தன் என்கின்ற எம்பார். எம்பாரின் திருத்தம்பியான சிறிய கோவிந்தப்பெருமாளும் அவரது வம்சத்தினர்களான பராங்குச நம்பியும், கூரம் நாராயண ஜீயரும் திருவரங்கனுக்கு அருந்தொண்டாற்றினர்.

ஸ்ரீராமானுஜரும் எம்பாரும் திருப்புட்குழி என்கின்ற வைணவ திவ்யதேசத்தில் வசித்துவந்த யாதவப்பிரகாசர் என்ற சாஸ்திரஞானம் நிறையப்பெற்ற பண்டிதரிடம் கல்வி கற்றுவந்தனர். யாதவப்பிரகாசர் அத்வைத நெறியைக் கடைப்பிடித்து வந்தாராயினும் ஆதிசங்கரரின் மாயாவாதத்தை ஏற்கவில்லை. யாதவப்பிரகாசரின் கருத்துப்படி சித், அசித், ஈஸ்வரன் இம்மூன்றும் பிரம்மத்தின் அம்சங்களாகத் திகழ்ந்தன. ஆயின் ஈஸ்வரனுக்கும் பிரம்மத்திற்கும் பேதமில்லை என்ற கொள்கையுடையது விசிட்டாத்வைத நெறி. ஆதலால் ஸ்ரீராமானுஜருக்கும் யாதவப்பிரகாசருக்கும் கருத்து வேறுபாடு நிலவிவந்தது.

ஒருமுறை யாதவப்பிரகாசர் பிரம்மம் சத்தியமானது, அறிவுமயமானது, இறுதியற்றது என்று உபநிடத மந்திரத்திற்குப் பொருள் கூறினார். ஸ்ரீராமானுஜர் அவ்விளக்கத்தை மறுத்து ''பிரம்மம் சத்தியமானது அசத்தியம் கொண்டதல்ல, ஞானத்தைக் கொண்டது அஞ்ஞானத்தையல்ல, இறுதியின்மை அதன் பண்பு, இறுதியல்ல'' என்றும் உபநிடத மந்திரத்தின்படி இவையனைத்தும் பிரம்மனின் பண்புகள், ஆயின் இவை பிரம்மம் அல்ல'' என்று கூறினார். உபநிடத மந்திரத்தின் இவ்வர்த்தத்தை பல வித்வான்களும் போற்றினர். யாதவப்பிரகாசரோ பொறாமை கொண்டார்.

''பண்புடைமை'' என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர்

''நகல் வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும் பாற் பட்டன்று இருள்'' என்றார்.

அதன் பொருளாவது தன்னிலும் அறிவுடையோர் மாட்டும், மற்றும் எல்லோரோடும் கலந்து அறியப்பெறாமையின் அம்மாக்கள் பண்பிலார், உலகியல் தெரியாதவர் என்றும், மிகவும் பெரிய உலகம் இருளில்லாத பகற்பொழுதின்போதும் அவர்கட்கு இருளின்கண் கிடந்ததாகும்; கற்றோராயினும் அவர் வறுமையுடையவரேயாவர் என்பதாம்.

யாதவப்பிரகாசர் ஸ்ரீராமானுஜரின் கீர்த்தியைப் பொறுக்கவொண்ணாதவராய் சிஷ்யர்களைக் கூட்டி அனைவரும் காசியாத்திரை செல்வதென்றும் அங்கே ஸ்ரீராமானுஜரை கங்கையில் மூழ்கச்செய்துவிடுவதென்றும் தம் தீர்மானத்தைத் தெரிவித்தார். விந்திய மலையடிவாரத்தை அடைந்ததும் அங்கு சில நாட்கள் தங்கினர். அப்போது எம்பாருக்கு யாதவப்பிரகாசரின் திட்டம் தெரிந்துவிட்டது. உடன் அவர் ஸ்ரீராமானுசரிடம் அது பற்றிக்கூறி அங்கிருந்து சென்றுவிடும்படி கூறினார். ஸ்ரீராமானுசரும் பேரருளாளன் கிருபையால் காஞ்சிக்குத் திரும்பினார். இவ்வாறு ஸ்ரீராமானுசரை எம்பெருமானுக்கும் வைணவ உலகிற்கும் காப்பாற்றித்தந்தபெருமை எம்பாருடையதாயிற்று. தர்மத்தைக் காத்தவர்களை

தர்மம் காக்கும் என்ற பொருள்பட ''தர்மோ ரக்ஷதி ரக்ஷிதக'' என்பர்.

இவ்வாறிருக்கையில், எம்பார் யாதவப்பிரகாசருடன் காசி க்ஷேத்திரம் சென்றார். அங்கு புனித நீராடுகையில் அவர்க்கு உள்ளங்கையில் ஒரு சிவலிங்கம் கிடைத்தது. அச்சிவலிங்கத்தைத் தமது ஊருக்கு எடுத்துவந்து பிரதிஷ்டை செய்து தொண்டுபுரிந்துவந்தார். பிறகு திருக்காளத்தி சென்று ஆலய நிர்வாகப்பணியில் ஈடுபட்டார். கோவிந்தரை சைவர்கள்''லிங்கம் உள்ளங்கைக் கொணர்ந்த நாயனார்'' என்று போற்றுவர்.

சில காலம் சிவபக்தியில் திளைத்தபிறகு திருமலை நம்பிகளின் அறிவுரைப்படி திருவேங்கடப்பொற்குன்றத்திற்குத் திரும்பினார். அதன்பிறகு ஸ்ரீநிவாசப் பெருமாளின் திருவடி நிழலுக்குக் கட்டுப்பட்டவராய் வைணவ கைங்கர்யத்திற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்டார்.

யாதவப்பிரகாசர் தனது தவறினை உணர்ந்தவராய் திருக்கச்சி நம்பிகள் மூலம் விசிஷ்டாத்வைத நெறியின் பெருமைகளை அறிந்தார். திருவரங்கம் சென்று ஸ்ரீராமானுசரின் திருவடிகளிலே தெண்டன் சமர்ப்பித்து ''கோவிந்தஜீயர்'' என்ற திருநாமத்துடன் உடையவரது சிஷ்யரானார். ''யத தர்ம சமுச்சயம்'' என்பது கோவிந்த ஜீயர் இயற்றிய மிகச்சிறந்த நூலாகும். இதில் வைணவத் துறவிகளின் கடமைகள் விவரிக்கப்பட்டுள்ளன.

திருமலைநம்பிகளும் அவரது சிஷ்யரான எம்பாரும் திருப்பதியில் கைங்கர்யம் செய்து வருகையில் ஸ்ரீராமானுசர் முதல்முறையாக திருவேங்கடமுடையானைத் தரிசிக்கச் சென்றார். அங்கு திருமலை நம்பிகளிடம் இராமாயண வியாக்யானம் அருளப்பெற்றார். திருமலைநம்பிகள் ஸ்ரீராமானுசரின் அறிவாற்றலைப் போற்றியவராய் குரு ஸ்தானத்தில் அவர்க்கு ஏதேனும் தரஆசைப்படுவதாகக் கூறினார். எம்பாரின் ஆசார்ய நிஷ்டை, கல்வி-கேள்வி ஞானம், ஜீவகாருண்யம் போன்ற குணாதிசயங்களை உணர்ந்திருந்த உடையவர், எம்பாரைத் தன்னுடன் திருவரங்கப்பெருமானுக்குத் தொண்டுபுரிய மிக உகந்து எம்பாரை உடையவருக்கு அபிமானமாக அளித்தார். துறவறம் ஏற்று சிஷ்யரான எம்பாருக்கு அத்திருநாமத்தை அருளியவரும் எம்பெருமானாராவார். ஸ்ரீராமானுசருடைய திருவடி நிழலாகத் திகழ்பவர் எம்பார் என்ற பொருள்பட ''ராமானுஜ பதச்சாயா'' என்று எம்பாரது சிஷ்யரும் கூரத்தாழ்வாரது திருக்குமாரருமான பராசரபட்டர் ''ஸ்ரீரங்கராஜஸ்தவம்'' என்னும் நூலில் கூறுகிறார்.

திருமலைநம்பிகளிடம் கல்விகற்றுக்கொண்டிருந்த சமயம் ஸ்ரீராமானுசரும் எம்பாரும் ஓரிடத்திற்கு ஒருங்கே சென்றுகொண்டிருந்தனர். வழியில் பாம்பு ஒன்று, முள்போன்ற வஸ்து அதன்வாயில் அகப்பட்டுக் கொள்ளவே நிலைதடுமாறியது. அதனைக்கண்ட எம்பார் தன் கையைப் பாம்பின் வாயிலே வைத்து முள்ளை அகற்றினார். பின்குளித்துவிட்டுவந்தார். இதனைக் கண்ட ஸ்ரீராமானுசர் ''குற்றமற்ற ஜீவனை ஏன் வதைத் தாய்? மேலும் பாம்பின் அருகே சென்று இவ்வாறு விளையாடுவது சிறுபிள்ளைத்தனமல்லவா?'' என்று கடிந்து கொண்டார். எம்பாரோ ''அண்ணா, அதன் வாயிலே இருந்த முள்ளை அகற்றினேன். சற்றுநேரத்தில் மயக்கம் தெளிந்துவிடும்'' என்றார். எம்பாரின் ஜீவ காருண் யத்தை ஆசார்யர் வியந்து போற்றினார்.

திருமலைநம்பி திருமாளிகையில் எம்பார் கைங்கர்யம் செய்து வருங்கால், ஆசார்யருக்குத் திருப்படுக்கை ஏற்படுத்துகையில் அதில் முதலில் தான் படுத்துக்கொண்டு படுக்கையை சோதித்துப்பார்ப்பார். இதனை ஒருமுறைகண்ட திருமலைநம்பிகளும் ஸ்ரீராமானுசரும் அச்செய்கையால் சிஷ்யன் ஒருவனுக்கு நரகம் விளையுமே எனக்கூற எம்பாரோ அது அப்படியேயாயினும் ஆசார்யர் படுக்கும்போது ஒரு துன்புறுத்தலும் வராது இருப்பின் பின்னது நன்றேயென்றார். எம்பாரின் ஆசார்ய பக்தியைத் திருமலைநம்பிகளும் எம்பெருமானாரும் உகந்தருளினர்.

(வர்த்தமாலை -210)

ஸ்ரீராமானுஜரின் சிஷ்யர்கள், ஒருவரிடம் மற்றொருவர் அபிமானம் கொண்டு விளங்கினர். இவ்வளவில் ஸ்வாமி முதலியாண்டானிடம் சிஷ்யராக இருந்த ஒருவரை அதுஅறியாமல் எம்பார் சிஷ்யராக ஏற்றுக் கொண்டுவிட்டார். பின் எம்பாருக்கு இவ்விஷயம் தெரிய வரவே ஸ்வாமி முதலியாண்டானைக்கண்டு அச்சுற்றார். அதற்கு ஆண்டான் ''ஒரு கிணற்றிலே விழுந்தவனுக்கு இரண்டுபேர் கை கொடுத்தால் அவர்களுக்கும் எளிது, இவனுக்கும் எளிது'' என்றார்.

(ஈடுமுப்பத்தாறாயிரப்படி-2876)

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த பெரிய திருமொழிக்கு எம்பார்''தனியன்'' எனப்படும் வாழ்த்துப் பாடல்களை இயற்றியுள்ளார்.

''மாலைத் தனியே வழிபறிக்கவேணும் என்று
கோலிப்பதிவிருந்த கொற்றவனே - வேலை



அணைத்தருளும் கையால் அடியேன் வினையை
துணித்தருள வேணும் துணிந்து'' என்பதது.

தமிழ்மொழியில் வடமொழியிலும் புலமை பெற்றிருந்த எம்பார் அரையர் சேவையில் திருத்தங்கள் செய்தார் என நம்பிள்ளை குறிப்பிட்டிருக்கிறார். பிள்ளை திருநறையூர் அரையர் ''எனக்கே ஆட்செய் எக்காலத்தும் என்று'' என்ற திருவாய்மொழிப் பாசுரத்திற்கு விளக்கம் கேட்டபோது எம்பார், ''முக்தரும் நித்தியரும் தாமும் ஆனந்தித்து பகவானையும் ஆனந்திப்பார்கள்; பக்தர்கள் தாம் ஆனந்தியாமல் பகவானை ஆனந்திப்பார்கள் எனக் கூறினார் என்பர். (ஈடு முப்பத்தாறாயிரப்படி - 2878) எம்பெருமானார் திருவடிகளிலே எம்பார் பாடல்கள் இயற்றியுள்ளார். ''பற்பமெனும்'' எனத்தொடங்கும் இப்பாடல்களை நிறைவு செய்யுங்கால் எம்பார் இவ்வாறு கூறுகிறார்.

''எம்பொழுதும் எதிராசன் வடிவழகு என்
இதயத்துளதால்
இல்லை எனக்கெதிர், இல்லை எனக்கெதிர்
இல்லை எனக்கெதிரே''

தமிழ்வேதமாகிய திருவாய்மொழிக்கு எம்பார் அருளிய வியாக்யானங்கள் ''ஈட்டில்'' இடம்பெற்றிருக்கின்றன.

''ஒத்தார் மிக்காரை இலையாய் மா மாயா
ஒத்தாய் எப்பொருட்கும் உயிராய் எனைப்பெற்ற
அத்தாயாய்த் தந்தையாய் அறியாதன அறிவித்து
அத்தா, நீ செய்தன அடியேன் அறியேனே''
(திருவாய்மொழி - 2808)

நம்மாழ்வார் ''எனைப்பெற்ற தாய்'' என்னாது ''எனைப்பெற்ற அத்தாய்'' என்றார். இதனால் ''நோன்பு நோற்று வருந்தி வரங்கிடந்து பெற்ற தாய்'' என்று பொருள் வருவிக்கப்பட்டது.

இப்பாசுரத்தில் இவ்வாத்மாவிற்கு ''பிரதமகுரு'' யார் என்ற வினாயெழ உடையவரது சிஷ்யர்கள் சிலர் ''ஆசார்யன்'' என்றும், சிலர் அவ்வாசார்யனைக் காட்டிய ''ஸ்ரீவைஷ்ணவர்கள்'' என்றும் அர்த்தம் கூற, எம்பார் ''பிரதமகுரு'' என்பவர் ஆசார்யனை ''இசைவித்த'' சர்வேஸ்வரனே என்று பொருள் உரைத்தார். பீதாம் பரத்தையுடைய சர்வேஸ்வரனே பிரம்மத்தை உபதேசிக்கிற ஆசார்யன் என்று பெரியாழ்வாரும் முன்பு அவ்வாறே மொழிந்தார் என்பதைக் காணலாம். (பெரியாழ்வார் திருமொழி - 450)

சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் அமைந்துள்ள சுங்குவார் சத்திரத்திலிருந்து எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஸ்ரீவைகுண்டப் பெருமாள் கோயில் அருகே எம்பாருக்குத் தனிக்கோயில் உள்ளது. ஸ்ரீவைகுண்டப்பெருமாள்கோயிலில் எம்பார் ஆராதனை நடத்திவந்தார் எனக்கூறுவர். ஒவ்வொரு வருடமும் தைமாதம் புனர்பூச நக்ஷத்திரத்திருநாளன்று எம்பாருக்கு அவதார உற்சவம் நடத்தப்படுகிறது. பரந்தமானுக்கும் பரமேஸ்சுவரனுக்கும் தொண்டு புரிந்த எம்பாரை அத்திருநாளன்று வைணவ சைவ சம்பிரதாயத்தினர் ஒருங்கே பெருந்திரளில் வந்திருந்து வழிபாடு செய்து எம்பாரது அருளைப்பெறின் வைணவ சைவ ஒருமைப்பாட்டிற்கு இலக்கணமாகத்திகழும்.

எம்பாரை நமக்களித்த இராமாநுசர்

கார்ஏய் கருணை இராமாநுச!
இக்கடல் இடத்தில்
ஆரே அறிவார் நின் அருளின் தன்மை?

- இராமாநுச நூற்றந்தாதி

மேனை அரிவைக்குரிய பேரன்

- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

பண்டைக்காலம் தொட்டே, வைணவமும், சைவமும், பரம்பொருளையே உறவாகக் கொண்டு பலவித உறவுக் கோணங்களில் பொருத்தி, அருட்கவி களின் வாயிலாக அறிவித்துள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தி யாகும்.

அருணகிரியார், முருகப்பெருமானுக்கு நூதன முறையில் உறவு முறைகளைப் பொருத்தி பாடியுள்ளது மிகவும் போற்றத் தகுந்ததொன்றாகும். அத்தகு உறவு முறைகளை சிறிது ஆராய்வோம். பொதுவாகவே, முருகன் திருவருள் பேற்றினால் பாடல்கள் புனைந்த வர்கள் மூவர் என சைவமதம் அறிவிக்கிறது.

1. நக்கீரர், 2. கச்சியப்ப சிவச்சாரியார், 3. அருண கிரிநாதர். - முதல் இருவரும் பக்திரசம் ததும்பும் விதத்தில், சிவனோடும், பார்வதியோடும், விநாயக ரோடும், திருமாலோடும், முருகனுக்கு உள்ள உறவு முறைகளைப் பாடியிருந்தபோதிலும் இவ்விருவரையும் அருணகிரிநாதர் தமது திருப்புகழ் மூலம் மிஞ்சிவிட்டார் எனக் கூறலாம்.

பொதுவாகவே எல்லாப் புலவர்களும் முரு கனை சிவனது குமாரன் எனவும், பார்வதியின் மைந்தன் எனவும், விநாயகருக்கு தம்பி எனவும், வள்ளி தெய்வ யானை இருவருக்கும் கணவன் எனவும், திருமாலுக்கு மருகன் எனவும், பிரம்மாவுக்கு மைத்துனன் எனவும், பாடிப் போந்துள்ளது யாவரும் அறிந்ததொன்றே. ஆனால் யாவராலும் கூறப்படாத உறவு முறையை முருகனுக்கு பொருத்திப் பாடியவர் அருணகிரியார் ஒருவர் தான் என்றால் மிகையாகாது. அருணகிரியார் பாடிய வேளைக் காரன் வகுப்பில்

''மேனைஅரிவைக்குரியபேரனும் மதித்ததிறல்
வீரனும், அரக்கர்குல - சூறைக்காரனும்''

எனப்பாடியுள்ளமை சிந்திக்கத்தகுந்தது.

இதன் கருத்து :

மேனை அரிவைக்குரிய பேரனும் - மேனை பார்வதியின் தாயார். பார்வதியின் பிள்ளை ஆகிய முருகன் மேனையின் பேரன் ஆவார்.

அதாவது இமயராஜனின் மனைவியாகிய மேனை என்பவளுக்குப் புத்திரியாக பார்வதி பிறந்தாள். பார்வதிக்கு முருகன் மகன் என்பது யாவரும் அறிந்துள்ள ஒன்று. அந்த முறையில் மேனையின் மகள் வயிற்றுப்பிள்ளையான தால், மேனைக்கு பேரப்பிள்ளை முருகன் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என விளங்கும்.

இது போன்ற கருத்துக்களை அருணகிரியாரது பாடல்களில் பல இடங்களில் காணலாம். அருணகிரியார் காலத்துக்கு முன்பும் சரி, பின்பும் சரி எந்த அருளாளர் களும், இத்தகு உறவு முறையைத் தமது பாடல்களில் கையாண்டுள்ளதாக எங்கும் குறிப்புகள் காணவில்லை.

இனி மேனைக்குப் பேரன் என அருணகிரியார் உறவு கொண்டதுபோல் காரைக்கால் அம்மையாருக்கு முருகன் பேரன் என்ற வகையிலும் எண்ணி மகிழலாம்.

எல்லா நாயன்மார்களும், காதலால் கசிந்து உருகி பாடிய பின்னரே இறைவனிடத்தில் ஐக்கியம் அடைந்த போதிலும், காரைக்கால் அம்மையார் ஒருவர்தான், பேய் உருவம் கொண்டு கைலாயம் சென்று இறைவனை தரிசித்து மறுபடியும், மண்ணுலகத்திற்குத் திரும்பிய புண் ணியவதி என்றால் இவரது பெருமை அளவிடற்கரியது. காரைக்கால் அம்மையார் பேய் உருவம் கொண்டு கயிலையைக் காணச் சென்றதும், பார்வதி இவ்வுருவத் தைக் கண்டு, அதிர்ச்சியுற்று, யார் இந்த உருவம்? என இறைவனிடம் கேட்டதற்கு, முழு முதற் கடவுளாகிய சிவனே அவ்வுருவத்தைக் கண்டதும் குதூகலத்துடன் 'அம்மையே வருக' எனத் தாம் எழுந்து வந்து அழைத் ததைக்கண்டதும் பார்வதியே மெய்சிலிர்த்து நின்றாள். எந்த சைவபுராணங்களிலும், சிவன் எந்த அடியார்களை யும் அப்பா என்றோ, அம்மா என்றோ, அழைத்ததாக எங்கும் குறிப்புகள் காணவில்லை. அதற்கு மாறாக காரைக்கால் அம்மையார் ஒருவரை மட்டுமே ''அம்மையே'' எனக்கூறியது பெரியபுராணத்தில் அறியப்பட்ட செய்தியாகும். இதனால் சிவனுக்குத் தாய் காரைக்கால் அம்மையார் எனக் கொள்வதில் பிழை என்ன இருக்கப்போகிறது? அந்த உறவு முறையில் முருகனைக் காரைக்கால் அம்மையாரின் பேரன் எனக் கொள்ள வாய்ப்பு உள்ளது. இதனை மறுக்கவோ மறைக்கவோ சைவமக்கள் யாவருக்கும் மனம் இடம் தராது எனக் கருதுகிறேன். இன்றைய நாளில் சிவாலயங்களின் பிரகாரத்தில் 63 நாயன்மார்களையும், கருங்கல்லி லும், பஞ்சலோகத்திலும் உருவச் சிலைகள் அமைத்திருப் பதைப் பார்க்கலாம். எல்லா நாயன்மார்களையும், சிலை வடித்த கலைஞன், நிற்கும் பாணியில் வடிவமைத்த போதிலும், காரைக்கால் அம்மையார் சிலையை உட் கார்ந்திருக்கும் பாணியில் சிலை வடித்துள்ளது, தாய்க் குலத்துக்கே பெருமை சேர்ப்பதாகும்.

விஸ்வரூப முருகன்

- கல்பாக்கம் அருள்ஞானி அடிகளார்

முருகன் என்றாலே அழகன் என்று பெயர். அவனுக்கு ஆயிரம் நாமங்கள் உண்டு என்று சொன்னால் நம்புவீர்களா? அக்கினிப்பூ, அஜாரூடர், ஆலமர், கரிமுதல் இளவல், செங்கல்வராயன், சேனாபதி, குப்புசாமி என்று 400க்கும் மேற்பட்ட பெயர்கள் உண்டு. வடிவேல், திருவேல், ஞானவேல், சக்திவேல், அருள்வேல் என்று சுமார் 300 வேல்களின் பெயர்களிலே அழைக்கலாம்.

நீங்கள் ஒரு தலைமுருகனையும், ஆறுமுகக் கடவுளையும் பார்த்திருப்பீர்கள். முருகனை இரு தலை களுடன் அக்னிஜாதராக சென்னிமலையில் காணலாம். 3 தலைகளுடன் 6 கரங்களுடன் காசிப்பாளையத்தில் காணலாம். 4 தலையுடன் 8 கரங்களுடன் மயில் மேல் அமர்ந்த முருகனை திண்டுக்கல்லுக்கருகிலுள்ள சின்னாளப் பட்டியில் கண்டு சேவிக்கலாம். 5 தலையுடன் 8 கரங்க ளுடன் மேட்டுப் பாளையத்திற்கு அருகிலுள்ள ஓதிய மலையில் பார்க்கலாம். 10 தலைகளுடன் 20 கரங்களுடன் இராவணன் போல் குற்றாலத்திற்கு அருகிலுள்ள இலஞ்சியில் கண்டு சேவிக்கலாம். 12 தலைகளுடன் 24 கரங்களுடன் பழனி மலைமீது வடக்கு மண்டப வாயிலிலே விஸ்வரூப காட்சியாக காணலாம்.

கண்ணீர் விட்ட முருகனைக் காணவேண்டுமா? திருக்கழுக்குன்றத்திற்கு அருகிலுள்ள குழிபரந்தண்டலத் திற்கு வடக்கே 2 கி.மீ. தூரம் சென்றால் வளவந்தாங்கல் என்ற கிராமத்தில் காணலாம். கண்ணைத் திறந்து நம்மை பார்க்கும் முருகனைப் பார்க்க வேண்டுமா? கோவை மாவட்டத்திலுள்ள குருந்த மலையில் காணலாம். பனை மரத்திலான முருகனைத் திருப்போரூரில் பார்க்கலாம். கையில் கோழியுடன் கைத்தல மலையிலும், கையில் கிளியுடன் கனககிரியிலும் காணலாம். கையில் தாமரைப் பூ ஏந்திய முருகனை ஆனூரில் கண்டுகளிக்கலாம்.

கண்ணனைப்போல காளிங்க நர்த்தனமுருகனை நாகவாகனத்தில் சென்னை மேற்கு மாம்பலத்திலுள்ள முருகாஸ்ரமத்தில் காணலாம். குதிரை மேல் அமர்ந்த முருகனை கோவையிலுள்ள மருதமலையில் காணலாம். யானையின் மீது அமர்ந்த முருகனை காஞ்சிக்கருகி லுள்ள மாகறல் என்ற தலத்தில் காணலாம். ஆட்டுக்கடா வாகன முருகன் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருங்கூரில் காணலாம். சிம்ம வாகனம், கிளி வாகனத் துடன் உள்ள முருகனைத் திருப்போரூரில் காணலாம்.

முருகன் மயில்மீதும் வள்ளி தெய்வயானை இரு வரும் ஆளுக்கொரு யானை மீதும் அமர்ந்துள்ள அற் புதத்தைக் காணச் சென்னை மயிலை கபாலீசுவரர் கோயி லுக்குச் செல்ல வேண்டும். குன்றக்குடியிலும், திண்ணி யத்திலும் மூவரும் ஆளுக்கொரு மயில் மீது அமர்ந் துள்ள காட்சியினை காணலாம். கௌஞ்சியப்பர் கோயிலில் முருகன் ஓர் பலிபீடமாகவே காட்சி தருகிறார். கொல்லிமலைக்கு அருகிலுள்ள கூவை மலையில் முருகன் வேடவடிவில் கையில் சேவலுடன் காட்சி தருகிறார்.

முருகனை மகாவிஷ்ணுவை போல கையில் சங்கு சக்கரத்துடன் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள அரிசிற் கரைப் புத்தூரில் உள்ள சொர்ண புரீஸ்வரர் ஆலயத்தில் காணலாம். தஞ்சை மாவட்டத்திலுள்ள திருப்பனை யூரிலுள்ள சொந்தரரேஸ்வரர் ஆலயத்திலுள்ள சோமாஸ் கந்தர் இடக்கையில் ஒரு மாம்பழம் ஏந்தியுள்ள அதிசய காட்சியினைக் காணலாம்.

சென்னை பெசன்ட் நகரில் ஆறுபடைவீடு என்று முருகன் கோயில்களை அமைத்துள்ளார்கள். பெங்களூ ரில் பன்சங்கரி என்ற இடத்தில் ஏழுபடைவீடு என்று ஒரு முருகன் தலம் உள்ளது.

7 அடி உயரமுள்ள முருகனை வல்லக் கோட்டையில் தரிசிக்கலாம். 8 அடி உயரமுள்ள முரு கனை சென்னை வளசரவாக்கத்தில் வெங்கடேச சுப்ர மணிய நகரில் கண்டு களிக்கலாம். 10 அடி உயரமுள்ள முருகனை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வேளிர் மலையில் காணலாம். 12 அடி உயரமுள்ள முருகனை சென்னை நங்கை நல்லூரில் பார்த்து மகிழலாம்.

முருகன் மூன்று முறை விஸ்வரூப காட்சியை காட்டி அருளினான். முதலில் இந்திராதி தேவர்களுக்கு தன்பெருமையை காட்ட விஸ்வரூபம் காட்டினான். சூரபதுமன் செய்த தவத்தின் பயனாகவும் அவன் மீதுள்ள அன்பினாலும் தன்னை எதிர்த்து போரிடவந்த சூரபதுமன் தன்னை புரிந்து கொள்ளவும் அவனுக்கு விஸ்வரூபத்தை காட்டி அருளினான். மூன்றாவதாக தன்னுடன் இருந்து தான் இட்ட பணிகளை செய்தவரும் தனக்கு சகோதர னாகவும் இருந்த வீரபாகு தேவருக்கு விஸ்வரூபத்தை காட்டி அருளினான்.

புத்தாண்டில் முருகப்பெருமான் பதமலர் போற்றி
இன்புறுவோமாக!

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற
ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி

இறைவனைக் காணும் வழி

- திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

எங்கோ இருக்கிறான் இறை என்று இங்கிருந்து கொண்டு தேடுகிறோம். கோவில் கோவிலாக, ஊர் ஊராக அலைந்து பார்க்கிறோம். ஆனால் நாம் தேடும் இறை, நமது மனம் நாடும் இறை நமக்குள் இருந்து கொண்டுதான் நம்மைச் செயல்படுத்துகிறார் என்பதை நாம் அறிய வேண்டும். நெல்லில் இருந்து உமியை நீக்கியபின்தான் நமக்கு அரிசி உணவாகிறது. அப்படித்தான் நம் மனதி லுள்ள உமியாகிய வெளிப்புற வாழ்வை நீக்கி அதை ஒரு பொருட்டாக நினைக்காமல் அகவாழ்வை, அதாவது உள்மனது என்பது ஒன்று, அதில் உறைந்து இருப்பவன் ஆண்டவன் என்ற பரம்பொருள். அந்த பரம்பொருளே ஒவ்வொரு உள்ளத்திலும் உறைந்து உள்இருப்பதால் அதை அகழ்ந்து தேடி அதனோடு உறவாட நாம் உள் ளன்பை அளித்து உள்ளன்பைப் பெறவேண்டும். அந்த உள்ளன்பு என்பது இறை வசிக்கக் கூடிய இடத்திலிருந்து வருவதால் அதனுடைய தூய்மையானது உலகையே வசீகரிக்கக் கூடியது.

நெல்லிலிருந்து வரும் உணவு அரிசி. அரிசி எப்படி நமது வயிற்றுப் பசியைப் போக்க வல்லதோ, நமக்கு கார்போஹைட்ரேடு என்ற முக்கியமான சக்தியைத் தரவல்லதோ அப்படித்தான் 'அரிசி' அரி + சி' - அரியும் சிவனும் ஆகிய இறைவன் நமது உள்ளத்துப் பசிக்கு உணவாய் இருக்கிறார். எப்போதும் இறை நாமத்தை - 'சிவா' என்ற நாமத்தை நாம் சுவாசித்தால், 'சி'வனிடம் 'வா' என்று நமக்கு நம்முள் இருக்கும் சிவனை - நமது சுவாசம், அதாவது நமது உயிர், நமது வாழ்க்கை நமக்கு காண்பித்துத் தரும்.

'அரி' என்றும் 'ஹரி' என்றும் அந்த நாராயணனின் நாமத்தை நாம் சுவாசிக்கிறபோது, நாம் நினைக் கிறபோது, நமது உள்ளமாகிய பாற்கடலில் அவன் வசிப் பதை நாம் உணர முடியும். அதன் மூலம் பாற்கடலில் கிடைக்கும் அமிர்தத்தையும், நீக்க வேண்டிய நச்சுப் பொருள்களையும் (நஞ்சு) நம்நெஞ்சு அறிந்துகொள்ள முடியும். இப்படி அரியையும் சிவனையும் அறிந்து கொள்ளலாம். அப்படியும் நினைக்காதவர்கள் 'சக்தி' என்ற ஒன்றை, பொதுவான ஒன்றை நினைத்து நம்மைச் சுற்றியுள்ள பொருள்கள் எல்லாம் நமக்கு எப்படி கிடைக்கிறது. எங்கு உருவாகிறது என்று அறிந்து கொண்டு, உணர்ந்து அந்த இயற்கையை, சக்தியை எந்த நாமத்திலும் நாம் உணர்ந்து கொள்ளலாம். ஆனால் முக்கியம் எதுஎன்றால், நம்மை மீறிய சக்தியை அறிந்து கொண்டு, அதை நல்லவழியில் பிரார்த்தித்து, நாடி எல்லாவகையிலும் எல்லா வகையான இன்பங்களையும் பெற்று வரக்கூடிய வாழ்விற்கான பேரின்பத்தை அடை யும் வழியையும் நாம் அறிய வேண்டும்.

பல மகான்கள் பல வழிகள் அதற்காக சொல்லி யிருக்கிறார்கள். பல மந்திரங்களை ஜெபித்து அதன் மூலம் ஆண்டவன் அருளைப் பெற்று நாம் ஆண்டவனை உணர லாம், அடையலாம்.

அதில் சில மூல மந்திரங்கள்:

விநாயகர் :

ஓம் ஏகதந்தாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹீ
தந்நோ த்வந்தி ப்ரஸோதயாத்

முருகர் :

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹா ஸேனாய தீமஹீ
தந்நோ ஷண்முகப் ப்ரஸோதயாத்

ருத்ரர் :

ஓம் தத்புருஷாய வித்மஹே மஹாதேவாய தீமஹீ
தந்நோ ருத்ரப்ரஸோதயாத்

துர்கா :

ஓம் காத்யாயநாய வித்மஹே கன்னியகுமாரி தீமஹீ
தந்நோ துர்கிப்ரஸோதயாத்

குரு :

ஓம் வ்ருஷப த்வஜாய வித்மஹே க்ருணிஹஸ்தாய தீமஹீ
தந்நோ குருப் ப்ரஸோதயாத்

''ஓம் நமோ பகவதே வாஸுதேவாய நமஹ'' என்று கூறி அரியின் நாமத்தை பூஜித்தால், புசித்தால் அந்த அரி, காக்கும் கடவுள் நமக்கு எல்லாம் அளித்து நம்மை காப்பார்.

இப்படி பலமூலமந்திரங்களை, காயத்ரி மந்திரங் களை ஜபிக்கலாம். இருப்பினும் அதை ஜபிப்பதால் நாம் ஆண்டவனை அடையும் வழியை, ஸ்மரணையை



உணரமுடியுமே தவிர ஆண்டவனை அடைய, அவனுடன் உறைய, நாம் நமது செயல்களில் உண்மை, அன்பு, ஈவு, இரக்கம், தயை, நேசம் போன்ற இறை பண்புகளை செயல்வடிவத்தில் ஆக்கினால்தான் இறையை அடைய முடியும்.

இராமலிங்க அடிகளார் பார்வையில், 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற சிந்தனையில், இருக்கும் இறைக் கொள்கையை, கருணையை நாம் உணர வேண்டும்.

ஈதல். இசைபட வாழ்தல் என்பார் வள்ளுவர். அவருடைய இறைத்தன்மையை, நிறைத்தன்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். வழிபாடுகளில், உணருதலில், அடைதலில் பலவகை உண்டு.

பாரதி பாடுவார் 'தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று. இதில் உள்ள பசிப்பிணியைப் போக்கும் தன்மையைப் பாருங்கள். எல்லோர் உடலிலும் உள்ள ஜீவன், உடலுக்கு உணவு இட்டால்தான் வாழ முடியும். அந்த ஜீவனுக்கு சக்தி தருவது உணவு. எனவே அந்த உணவு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பது அவரின் இறைக் கொள்கை எனலாம்.

இப்படி ஆன்மீகவாதி முதல் அரசகவி பாரதிவரை எல்லோருமே ஏழையின் சிரிப்பையே இதயத்தால் நினைத்தார்கள். அதைக்காண பசிப்பிணியை அறுக்க வேண்டும் என்று துடித்தார்கள். இதற்காக ஒவ்வொருவரும் சொன்ன வடிவங்கள் வேறாக இருக்கலாம். வார்த்தைகள் வேறாக இருக்கலாம். ஆனால் நோக்கும், விருப்பும் இறையைத் தேட வேண்டும், இரையையும் தேட வேண்டும் என்பதே.

மொத்தத்தில் மனிதம் மலர, மனித நேயம் வளர்ந்தாக வேண்டும். அதற்கு அன்பு ஒன்றே வேராக இருக்க முடியும். அப்படி இருந்தால்தான் இறைவனைத் தொழுவதில் அர்த்தம் இருக்கும். 'அன்பெனும் பிடியில், அகப்படும் மலையே' - என்பது வள்ளலார் கருத்து. 'அன்பே சிவம்' இது தாயுமானவர் கருத்து. ஆகவே அன்பே இறைவன் இருக்கும் இடம் என்று உணர வேண்டும். அனைவர்க்கும் இதை நாம் உணர்த்த வேண்டும்.

★★★

கந்தரநுபூதி - ஆய்வுரை

- பேராசிரியர் இரா. கோபாலகிருட்டிணன்,
தத்துவத் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

நூற் பெயர்	:	கந்தர் அநுபூதி
உரை விளக்கம்	:	திருக்குறள் பீடம் முதற்குரவர் மாம்பாக்கம் குருகுலம் சிவத்திரு அழகர் அடிகள்
நூல் வெளியீடு	:	தொண்டமான் சக்கரவர்த்தி பதிப்பகம், 3, பழைய அஞ்சலகத் தெரு, வேங்கடாபுரம், சென்னை - 600 053.
விலை	:	ரூ. 75/-
பக்கங்கள்	:	486 (டெம்மி)

ஆய்வுக்குரிய இந்நூல் சிவத்திரு அழகரடிகள், முதற்குரவர், திருக்குறள் பீடம், மாம்பாக்கம் குருகுலம் - தனது நுதுண்மாண்நுழைபுலத்தால் ஆற்றிய ஒரு விரிவான மற்றும் தெளிவான உரையின் சுருக்கம் ஆகும். அடிகளாரின் மாணாக்கர்களாகவும் அணுக்கத் தொண்டர்களாகவும் திகழ்ந்த அமரர் முத்துச்சாமி, த. ஆறுமுகம் மற்றும் கு. இர. முனிராசகோபாலன் ஆகியோர் தொகுத்து அளித்த கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

'அனுபூதி' என்பது இறைவனோடு இரண்டறக் கலந்து இன்புற்றிருக்கும் நிலை. 'யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்ற பெருவிருப்பில் இறையின்பத்தைத் துய்த்த ஞானிகள் எல்லோரும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்ற பெருவிருப்பில் 'ஆற்றுப்படை' வழிநின்று எடுத்தியம்புவர். தமிழ்க்கடவுளாம் கந்தபிரானை முழுமையாக அனுபவித்த அருணகிரி நாதர் தமது மாறா அனுபூதி நிலையை 51 பாடல்களில் 4 வரிகளில் யாத்து அமைத்துள்ளார். இரண்டு வரிகளில் முருகப்பெருமனுடைய அருள்வெளிப்பாடு, தன்மை, போன்றவற்றை விளக்கி மற்ற இரண்டு வரிகளில் தனக்கு முருகன் எவ்வாறு அருள்கொடுத்து ஆட்கொண்டு 'சும்மா இரு சொல்லற' என்று கூறினான் என்பதையெல்லாம் வெளிப்படுத்துகிறார்.

இந்நூலின் சிறப்பு அம்சங்களாக நாம் காண்பது : (i) செய்யுளின் பொழிப்புரை (ii) வரிக்கு வரி, சொல்லுக்குச் சொல் விளக்கவுரை (iii) பொருத்தமான எடுத்துக்காட்டுக்கள் (iv) அந்தப் பாட்டுக்குரிய சக்கரம் ஆகியவை. தவத்திரு அழகரடிகள் சிறந்த தமிழ்ப்பற்றும், முருகப்பெருமான் மீது அளவற்ற அன்பும், மனப்பயிற்சியும், ஆன்மப்பயிற்சியும், நிறைந்தவர் என்பது இந்நூலில் அவரது விரிவுரை முழுவதும் விரவிக்கிடக்கிறது. நம் உடலில் இயங்கும் ஆறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆதாரச்சக்கரங்களைப் படமாகப் போட்டு ஒவ்வொரு பாடலுக்கும் சக்கரம் மற்றும் பீஜ எழுத்துக்களைப் போட்டு விளக்கியிருப்பது புதுமையாகவும், அதேசமயம் தெய்வீகப்பாடல்களுக்கு சொற்பொருள் விளக்கம் தருவதைவிட அனுபவ விளக்கம் தருவதே சாலச்சிறந்தது என்பதை நிரூபிக்கும் வகையாகவும் அமைந்துள்ளது.

6-வது பாடலில் 'வள்ளி பதம்' என்ற சொற்றொடருக்கு அடிகளார் 'வள்ளி' என்ற சொல்லுக்கு இதுவரை இல்லாத புதுமையான விளக்கம் தருகிறார். வள்ளி என்பது உடம்பின் வளம் என்ற உருவகம்; உடம்பின் வளம் என்பது குண்டலினி சக்தி எனப்படும் விளைவான சுழற்சி, ஒரு கொழுகொம்பைச் சுற்றிச் செல்லும் கொடி போன்றது; குண்டலினியாகிய வள்ளிக் கொடி முதுகந் தண்டாகிய (நடுநாடியாகிய) முருகனைச் சுற்றிச் சுற்றிச் செல்வதாகக் கூறப்படுகிறது. தினைப்புனம் மனித உடம்பின் நரம்புக்கூட்டம்; வள்ளி பறவைகளை ஒட்டினாள் என்பது உடலின் சத்தாகிய விந்துவை புலன்கள் (பறவைகள்) பறித்துச் செல்வதைத் தடுக்கும் செயல்; 'வள்ளி' என்பது பிரகிருதி மாயை என்னும் ஆன்ம தத்துவங்களைக் குறிக்கிறது - இவற்றின் தொகுப்புக்கு 'மான்' என்பதும் பெயர், எனவேதான் மானின் வயிற்றில் பிறந்தவள் வள்ளி எனப்புராணங்கள் கூறும். 8-வது பாடலில் 'மெய்ப்பொருள் பேசியவர்' என்பதற்கு அடிகளார் 9 வகைகளில் விளக்கம் அளிக்கிறார். ஞானம், கலை, பிரணவம், நாதம், விந்து, தத்துவம், கோலம், செய்கை மற்றும் சக்தி ஆகிய அகநாட்ட வழி நின்றால்தான் மெய்பயபொருள் விளங்கும்; பிறருக்கும் எடுத்துக்கூற முடியும். 13-வது பாடலில் வருமு 'முருகன்' என்ற சொல்லுக்கு ஆறு வகையான பொருள்கள் தருவது படித்து இன்புறத்தக்கதாகும்.

இந்நூல் முழுவதும் மந்திர, தந்திர மற்றும் யந்திர முறையில் விளக்கங்கள் விரவி வருவதைக் கண்டு இன்புறலாம்.

★★★

வினாவும் விளக்கமும்

– பருத்தியூர் டாக்டர் K. சந்தானராமன், M.A., D.Litt; Ph.D.

1. வினா : முழுமுதற் கடவுளான விநாயகரின் யானை முகம் உணர்த்தும் உட்பொருள் என்ன?

விளக்கம் : தெய்வத் திருவுருவங்கள் அனைத்துமே உயர்ந்த தத்துவங்களை உணர்த்துபவை.

அ) துதிக்கையுடன் சேர்ந்த யானை முகம் பிரணவம் என்ற ஓங்கார வடிவில் உள்ளது. அதாவது 'ஓம்' என்ற மந்திர எழுத்தைப் போல் தோற்றமளிக்கிறது. விநாயகர் தாமே பிரணவப் பொருளான முழுமுதற் கடவுள் என்பதை, தமது யானை முகத்தால் உணர்த்துகிறார்.

ஆ) யானை தன்னைக் கட்டும் சங்கிலி அல்லது கயிற்றைத் தானே எடுத்துப் பாகனிடம் கொடுக்கும். அதுபோல் இறைவனும் தன்னைப் பிணிக்க வல்ல 'பக்தி' என்ற கயிற்றை அடியார்களிடம் தாமே அளிக்கிறார்.

இ) உயரமான யானை மீது கீழே இருக்கும் நம் மால் ஏற முடியாது. யானை தானே மண்டியிட்டுக் கீழே குனிந்து தன்மீது ஏற்றிக் கொள்கிறது. உயர்ந்த நிலையில் இருக்கும் இறைவனும் தனது எளிவந்த தன்மையால் இறங்கி வந்து அடியவர்களை ஆட்கொள்கிறான்.

ஈ) பாகனும், குழந்தைகளும் தன் மீது ஏறிக் கொள்ள தனது காலை மடித்துக் கொண்டு அதன் வழியே ஏறிட உதவுகிறது. இறைவனும் தனது திருவடியைப் பற்றி உயர்வடையச் செய்கிறான்.

உ) தனது பாகனேயானாலும் தகாதன செய்யும் பொழுது தவறாது தண்டிப்பது யானையின் இயல்பு. தனது பக்தர்கள் ஆனாலும் தவறு செய்பவர்களுக்கு உரிய தண்டனையை அளிப்பதே இறைவனின் நீதியாகும்.

ஈசன் சுந்தரருடன் நட்பு முறையில் பழகினான். எனினும் சுந்தரர் சங்கிலியாருக்கு அளித்த உறுதி மொழியை மீறிய பொழுது கண்பார்வையிழக்கச் செய்தான் அல்லவா?

இவை போன்ற பல காரணங்களினால் ஆண் தெய்வங்களைக் களிறு என்றும், பெண் தெய்வங்களைப் 'பிடி' என்றும் குறிப்பிடுகின்றனர்.

2. வினா : 'திருமுறை', 'சன்னிதி முறை', 'அடங்கல் முறை' ஆகியவற்றின் விளக்கம் என்ன?

விளக்கம் : 'முறை' என்ற சொல்லுக்கு நூல் அல்லது புத்தகம் என்ற பொருளும் உண்டு. குறிப்பாக, முறை என்ற சொல் தெய்வத்தன்மை வாய்ந்த நூல்களைக் குறிக்கும்.

''இறை நிலம் எழுதுமுன் இளைய பாலகன் முறை வரைவேன் என முயல்வது ஒக்குமால்'' என்று கந்த புராண அவையடக்கச் செய்யுள் உரைக்கிறது. அதாவது, மணலில் எழுதிக் கல்வி பயிலத் தொடங்கும் சிறுவன் ''நான் நூலொன்று எழுதப் போகிறேன்'' என்று முயல்வது போன்றது தான் கந்தன் கதையை எழுதப் புகுந்த செயல்'' என்கிறார் கச்சியப்பர்.

சிறப்பு மிக்க சைவ நெறி சார்ந்த நூல்களை, 'பன்னிரு திருமுறை' என்றனர்.

ஒரு குறிப்பிட்ட திருக்கோயில் இறைவன் மீது பாடப்பட்ட பல்வேறு பிரபந்தங்களின் தொகுப்பை, 'சன்னிதி முறை' என்பர். எடுத்துக் காட்டாக, திருப்போரூர் முருகன் மீது சிதம்பர சுவாமிகள் இயற்றிய நூல்களின் தொகுப்பு 'திருப்போரூர் சன்னிதி முறை' எனப்பட்டது.

ஓர் ஆசிரியர் இயற்றிய அல்லது ஒரு வகையுள் அடங்கும் பாடல்களின் தொகுப்பு 'அடங்கல் முறை' எனப்படும். சம்பந்தரின் மூன்று திருமுறைகளையும் ஒரே நூலாக வெளியிட்டால் அதனைச் 'சம்பந்தர் தேவாரம் - அடங்கல் முறை' என்பர்.

மூவர் பாடிய தேவாரம் முழுவதையும் ஒரே நூலாக வெளியிட்டால் அதனைத் 'தேவாரம் - அடங்கல் முறை' என்பர்.

கிராம அதிகாரிகள் தங்கள் ஊரின் அனைத்து மக்களின் நிலவரிக் கணக்கு ஏடுகளையும் ஒரே கட்டாகக் கட்டி வைக்கும் பொழுது அதனை 'அடங்கல் கட்டு' என்று கூறும் வழக்கம் இன்றும் தென்மாவட்டங்களில் உண்டு.

3. வினா : உருவம், பெயர் முதலான அனைத்தையும் கடந்து நிற்கும் ஒரே பரம்பொருளுக்கு பல பெயர்களும், உருவங்களும் தேவையா?

விளக்கம் : ஆம்! இறைவன் நாமரூபங்களைக் கடந்தவன். அனைத்துச் சமயங்களும் கடவுள் ஒருவர்

அல்லது பரம்பொருள் ஒன்று என்பதை ஏற்றுக் கொள் கின்றன.

அவ்வாறு அனைத்தையும் கடந்து நிற்கும் பரம் பொருளை 'நிர்க்குண பிரம்மம்' என்ற கூறுவர். சராசரி மக்களின் அன்றாட வழிபாட்டிற்கும் தியானம் யோகம் போன்றவற்றுக்கும் ஏதாவதொரு இலக்கு வேண்டும். அத்தகைய இலக்காகவே வெவ்வேறு வடிவங்களில் இறைவனை வழிபடுகின்றனர்.

படிப்பறிவில்லாத பாமரரும் தாயை அறி வார்கள். எனவே, அவர்கள் தெய்வத்தை 'ஆத்தாள்' 'ஆயி' என்ற வடிவில் வழிபட்டனர். மாரி ஆத்தாள், காளி ஆத்தாள், காத்தாயி, பேச்சாயி போன்ற வடிவங்கள் பாமரர் வணங்கும் தாய்வடிவத் தெய்வங்கள்.

கல்வி, கேள்விகளில் நிறைந்தவர்களும், கலை ஞர்களும், புத்தகமும், வீணையும் தாங்கிய திருவுருவத் துடன் கலைமகள் என வழிபட்டனர்.

இவ்வாறே செல்வத்துக்கும், வீரத்துக்கும் தாய்த் தெய்வங்களாக இலட்சுமியும் துர்க்கையும் வழிபடப் பட்டனர்.

நடனக் கலைஞர்கள் கூத்தப்பிரானாக (நடராச னாக) வழிபட்டனர்.

யோகிகளும் தத்துவஞானிகளும் சின்முத்திரை காட்டும் தட்சிணாமூர்த்தியை வணங்கினர்.

ஆன்மிகப் பயிற்சியில் உயர்நிலை எய்திய மகான் களுக்கு நாமரூபங்களைக் கடந்த பரம்பொருளை அறிய வியலும். அந்த நிலை எய்தியவர்களுக்குப் பரம்பொரு ளுக்குப் பெயரும் உருவமும் தேவையில்லை.

அஃது எவ்வாறெனில், வான ஊர்தி தரையில் ஓடுபாதையில் செல்லும் வரை அதற்குச் சக்கரங்கள் (டயர்கள்) தேவை. அதுவே, மேலே எழும்பிப் பறக்கத் தொடங்கியவுடன் அதற்குச் சக்கரங்கள் தேவையில்லை.

எனவே, மக்கள் தங்கள் அறிவிற்கும் பக்கு வத்துக்கும் ஏற்ப குணங்களுடன் கூடிய பெயர்களுடன் கூடிய தெய்வங்களை வழிபட்டனர். அந்த நிலையில் கடவுளை 'சகுணப்பிரம்மம்' எனக் கூறுவர்.

இதையே, மாணிக்கவாசக சுவாமிகள் தமது திருவாசகத்துள் 'திருத் தெள்ளேணம்' என்ற பகுதியில்

''ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ!''

என்று தெளிவாக்கியுள்ளார்.

4. வினா : திருமாலடியார்களில் சிறந்தவர்களான பன்னிருவரை ஏன் ஆழ்வார்கள் என்று அழைக் கின்றனர்?

விளக்கம் : திருமாலிடத்து ஆழ்ந்த பக்தி கொண்டு இறை தியானத்தில் ஆழ்ந்து விட்டதால் அவர்களை ஆழ்வார்கள் என்றனர்.

வைணவ நெறி தொடர்பான அனைத்துத் துறை களிலும் ஆழங்காற்பட்டதால் அதாவது, ஆழ்ந்த புலமை பெற்றிருந்ததால் அவர்களை ஆழ்வார்கள் என்றனர்.

திருமால் நெறியைப் போலவே அவர்கள் தமிழ் மொழியிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர்கள். ஆழ்ந்த பொருட் செறிவுள்ள பாடல்களை அளித்தவர்கள் என்ப தாலும் அவர்களை ஆழ்வார்கள் என்றனர்.

5. வினா: திவ்ய தேசம், மங்களாசாசனம், அருளிச் செயல்கள் ஆகிய சொற்களின் பொருள் என்ன?

விளக்கம் : திருமாலுக்குரிய திருத்தலங்களை வடமொழியில் 'திவ்ய தேசம்' என்று கூறுவர். தெய் வத்தன்மை வாய்ந்த இடம் என்பது அதன் பொருள். தமிழில் அவற்றைத் 'திருப்பதிகள்' என்பர். திருப்பதிகள் அல்லது திவ்யதேசங்கள் நூற்றெட்டாகும்.

அவற்றுள் இரண்டு பூவுலகுக்கு அப்பால் இருப் பவை. ஒன்று திருமால் பாம்பணை மேல் பள்ளி கொண்டு அறிதுயல் செய்யும் திருப்பாற்கடல். மற்றொன்று 'பரம பதம்' அல்லது ஸ்ரீவைகுண்டம் எனப்படும் திருமால் உறையும் தனி உலகமாகும்.

திருமால் திருப்பதிகளுக்குச் சென்று ஆங்காங்கே உள்ள பெருமானை ஆழ்வார்கள் தரிசித்துப் போற்றி வாழ்த்திப் பாடினார்கள். அவ்வாறு அவர்கள் எழுந் தருளிப் பாடுவதை 'மங்களாசாசனம் செய்தல்' என் பார்கள்.

திருமாலின் அருளின்படி ஆழ்வார்கள் ஆங்காங்கு பாடிய அருட்பாடல்களையே 'அருளிச் செயல்கள்' என்றனர்.

ஆழ்வார்களின் பாடல்களைப் 'பாசுரங்கள்' என் றும் கூறுவதுண்டு. பன்னிரு ஆழ்வார்கள் அருளிய நாலா யிரம் பாடல்களின் தொகுப்பே 'திவ்ய பிரபந்தம்' எனப் புகழ் பெற்றுள்ளது.

தமிழ் மொழியை வடமொழியாளர்கள் 'திரா விடம்' என்ற சொல்லால் குறிப்பிடுவர். ஆகவே, ஆழ் வார்கள் அருளிய தமிழ்ப் பாடல்களையும் 'திராவிட வேதம்' என்று போற்றுகின்றனர்.

திருமயிலையில் அன்னை கற்பகாம்பாள் தங்கத்தேர் காண வாரீர்

- முனைவர் த. அமிர்தலிங்கம்



கற்பகாம்பாள் அன்னை
தங்கத் தேரோட்டம் தன்னைக்
காண வருவீர்காள் பக்தர்களே!
தங்கத் தேரோட்டம் தன்னைக்
கண்ட பின்பு தொட்டதெல்லாம்
தங்கமென துலங்கிவரும் பக்தர்களே! (கற்பகாம்பாள்)

முன்னையவள் மகிழ்ந்த திந்தப் புன்னைவனமே - தம்
மன்னவனைத் தொழுததந்த மயில் வணமே
பொன்னையே வெல்லும் எங்கள் அன்னை குணமே
கண்ணை இமை காப்பதுபோல் காக்கும் தினமே (கற்பகாம்பாள்)

பூம்பாவை தவம்இருந்த திருமயிலை - இந்தப்
பூவுலகில் இதற்கு இணை திருக்கயிலை
அத்திக்குடம் உயிர்பிழைத்த அற்புதமே - நம்
தேவார அருள் மகிமை உணர்த்திடுமே (கற்பகாம்பாள்)

பாலறா வாயருக்குப் பால்கொடுத்தாள் - நம்
சிங்கார வேலருக்கு வேல்கொடுத்தாள்
வணங்கிடும் அடியவர்க்குத் தாள் கொடுத்தாள் - நாம்
வாழ்த்தியே போற்றிடவே தேர் கொடுத்தாள்
தங்கத்தேர் கொடுத்தாள் (கற்பகாம்பாள்)

புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்

''திருக்கோயில்'' இதழ் உறுப்பினர்களுக்குப் பிறக்கும்
ஈராயிரமாம் ஆண்டு இனிய நல்வாழ்த்துகளையும்,
தமிழர்த் திருநாளாம்
பொங்கல் நல்வாழ்த்துகளையும்
அன்புடன் தெரிவித்து மகிழ்கின்றோம்.



திருமயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில்
அன்னை அருள்மிகு கற்பகாம்பாள் பவனி வரும் தங்கத்தேர்

பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99

மயிலை அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் 28.11.99 அன்று தங்கத்தேர் தொடக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்வளர்ச்சி இந்துசமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தங்கத்தேர் வெள்ளோட்டத்தைத் தொடக்கிவைத்தார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரசுவதி சங்கராசாரிய சுவாமிகள், கயிலை மாமுனிவர் பேரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சாந்தலிங்க ராமசாமி அடிகள், திருப்போரூர் ஆதீனகர்த்தர் தவத்திரு சிதம்பர சிவஞான சுவாமிகள் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு அருளாசியுரை வழங்கினார்கள். மயிலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு ந. பூ. இராம ஜெயம் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சென்னை இணை ஆணையாளர் திருமிகு ஜி. இராஜநாயகம், பி.ஏ.பி.எல்., திருக்கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவர் டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம், திருக்கோயில் செயல் அலுவலர் திரு. மு. இராமச்சந்திரன் மற்றும் அறங்காவலர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.